# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20
எண்: 11/2 மாடி, பெரியார் நகர்
E. B. எதிர், சென்னீர்குப்பம்
பூந்தமல்லி போஸ்ட்
சென்னை-600056.

## 1. லவோதிக்கேயா சபையின் பரிதபிக்கப்பட்ட நிலை
## 2.உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகம். வெளி 5:1

A book written within and on the backside, sealed with Seven Seals.Rev 5:1

## 3. முதலாம் முத்திரையின் இரகசியம்

1. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பரிபூரண புருஷராகும் வரைக்கும்: கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் பரிபூரணப்படும்பொருட்டு, கிறிஸ்துவின் ஊழியப்பணிக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா ஆகிய நான் எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த சுமார் 39 ஆண்டுகளாக இந்த ஊழியப்பணியில் என்னை தகுதிப்படுத்தி, பயன்படுத்தி, என் காலடிகள் வழுவாதப்படிக்கு என் நடைகளை தமது வழிகளில் ஸ்திரப்படுத்தி வருகின்ற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இது ஆரோக்கியமான உபதேசத்தை பொருத்துக்கொள்ள மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துப்போகும் காலம். ஆதலால் சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கிக்க, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் ஜனங்களை கண்டித்து, கண்டனம் பண்ணி, புத்திசொல்ல என்னை அர்ப்பணித்துள்ளேன். நான் அங்ஙனம் கடிந்துக்கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (2தீமோ.4:2-4)

2. இந்நாட்களில் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள், ஏழாம் சபைக்கால தூதனுடைய பெயரை கொண்டு, மந்தைக்குள் அதாவது தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபைக்குள் நுழைந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து நமக்கு கடைசிக்கால சபை தூதனால் கொடுக்கப்பட்ட வெளிப்பாடுகளுக்கு தங்களுடைய சுயகருத்துக்களையும், மாறுபாடான உபதேசங்களைக் கொண்டு, சபையை குழப்பத்திற்குள் கொண்டு வந்து விசுவாசிகளை வஞ்சித்து, ஏமாற்றி, அவர்களது விசுவாச கப்பலை சேதப்படுத்தி வருகிறார்கள். இதில் மறைந்த சகோ.பாலாசீர்லாறியின் முன்னாள் மணவாட்டிகள், இவரது முன்னாள் மணவாட்டிகளின் மணவாட்டிகள், விசுவாசிகள் போன்ற சகோ.பாலாசீர்லாறியின் வகையறாக்களுக்கு முக்கிய பங்கு உண்டு. ஒரு காலத்தில் சகோ.பாலாசீர்லாறியின் மணவாட்டியாக மறைந்த வேலூர் சகோ.தாமஸ் மற்றும் புதுக்கோட்டை மறைந்த சகோ.ஜெயராஜ் இருந்தார்கள். தங்கள் கற்பை இழந்து, முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்தார்கள். அதன்பின் இவர்களது மணவாட்டியாக திருச்சி நான் அறிய சகோதரர்கள் செழியன், அல்போன்ஸ், ரூபன், ராபின்சன் போன்றோர் இருந்தார்கள். இவர்கள் யாவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இப்பொழுது இவர்களது மணவாட்டியாக கற்பை இழந்தோர் கூட்டம் பற்பல இடங்களில் காணப்படுகின்றனர். இவர்களால் தான் சபையில் எங்கும், எதிலும் குழப்பங்கள். இவர்களை நம்பி, அநேகர் பாதாளத்தை நோக்கி அனுதினமும் வீர நடைபயணம் செய்துகொண்டு வருகிறார்கள். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்படாதவர்கள் இவர்களை நம்பி, இவர்கள் உபதேசத்தின் மேல் விசுவாசம் வைத்து சீரழிந்து திசைக்கெட்டு திரிகிறார்கள். இவர்களது ஆவிக்குரிய நிலை அந்தோ பரிதாபம்! காயீன் நேர்மையான எண்ணத்தோடு, தன் நிலத்தின் கனிகளை

கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டுவந்தான். நான் உண்மையாய் இருக்கும்வரை, இதில் வேறுஎந்தவிதமான வித்தியாசம் இல்லை என்று எண்ணினான். ஆனால் அது வித்தியாசம் உண்டாகிற்று. கர்த்தர் அவனுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை. பாருங்கள் நீங்கள் ஒரு காரியத்தில் உண்மையாகவே இருக்கலாம். ஆனால் அது தேவனுடைய பார்வையில் தவறாக இருக்கமுடியும். அதைத்தான் எனது சகோதரர்கள் செய்து வருகிறார்கள்.

3. தேவஆவியினால் அருளப்பட்டியிருக்கிற வேதவாக்கியங்களைக் கொண்ட, நமது கரத்தில் பரிசுத்த வேதாகமம் என்ற பெயரில் உள்ள, 66 புஸ்தகங்களைக் கொண்டதின் கடைசி புஸ்தகம் திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என தமிழில், The Revelation என ஆங்கிலத்தில் உள்ளது. அப்படியானால் இது யாரை அல்லது எதைக்குறித்த வெளிப்பாடு? ஆங்கிலத்தில் இதுக்குறித்து முதலாம் அதிகாரம் முதலாம் வசனத்தில் The Revelation of Jesus Christ என்றுள்ளது. அதாவது வெளிப்படுத்தின விசேஷம் : இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு ஆகும். ஆக பரிசுத்த வேதாகமத்தின் கடைசி புஸ்தகம், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய முழு வெளிப்பாடுகளை கொண்டதாக இருக்கிறது. ஆனாலும் இதர 65 புஸ்தகங்களும் கிறிஸ்துவைப் பற்றித்தான் தங்கள் மையப்பொருளாக கொண்டுள்ளன. இயேசு கிறிஸ்து இருக்கிறவர், இருந்தவர், வருகிறவர் (வெளி 1:4) இருந்தவர் : இயேசு இவ்வுலகத்தில் இருக்கும்போது ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். (உபா.18:18, அப். 3:21-23). இருக்கிறவர் : இயேசு கிறிஸ்து இப்பொழுது நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கும் ஆசாரியர் (ரோ.8:34) வருகிறவர் : வரப்போகும் ராஜா, அதாவது தாவீதின் குமாரனாக ஆட்சி, மற்றும் வரப்போகும் நியாயாதிபதி. ஆக இயேசு கிறிஸ்து முக்காலத்திற்கும் உரியவர். அவர் நேற்றும் (Yesterday) இன்றும் (Today) என்றும் (Forever) மாறாதவராக இருக்கிறார். (எபி13:8) ஆக வேதாகமும் முழுவதுமே இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தேவன் தம்மை கிறிஸ்துவின் மூலமாய் இந்த புஸ்தகத்தில் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறார். அதாவது தேவனை வெளிப்படுத்தவே இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்தார். ஏனென்றால் கிறிஸ்துவும் தேவனும் ஒன்றாயிருக்கின்றனர். தேவன் கிறிஸ்துவுக்குள் இருந்து உலகத்தை தம்மோடு கூட ஒப்புறவாக்கினார். வேறுவிதமாக கூறினால், தேவன் கிறிஸ்துவின் மூலம் தம்மை வெளிப்படுத்தாதிருந்தால், தேவன் யார் என்பதை நாம் அறிந்திருக்கவே முடியாது. கிறிஸ்து தேவனுடைய இருதயமாயிருக்கிறார்.

4. இயேசு கிறிஸ்துவைப்பற்றிய இந்த வெளிப்பாடு அப்.யோவானுக்கு எப்படி கிடைத்தது? இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாட்டை முதலாவது தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுத்தார். இயேசு கிறிஸ்து (இவர் யார்? பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவன்) நம் மத்தியில் வெகு சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை தம்முடைய ஊழியக்காரர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு, தம்முடைய தூதனை அனுப்பி அதாவது வெகு சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை, சபையில் சாட்சியாக அறிவிக்கும்படி இயேசு தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய யோவானுக்கு தெரிவித்தார். (வெளி.1:1, 22:6,16) தேவன் ஒருவனை எச்சரிக்காமல் அவனை நியாயத்தீர்ப்புக்குள் கொண்டுவரமாட்டார். முதலாவது எச்சரிப்பு. எதற்கு? அவன்தன் வேசி மார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவகாசம் கொடுக்கப்படுகிறது. அதன்பின் நியாயத்தீர்ப்பு. ஒவ்வொருவனுக்கும் அவன் கிரியைகளின்படியே பலன். ஆக இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டை சபைகளுக்கு கொடுப்பதில் முதலாவது தேவனின் பங்கு. இரண்டாவது இயேசுவின் பங்கு. மூன்றாவது இயேசு கிறிஸ்துவின் தூதனின் பங்கு. நான்காவது அப். யோவானுக்கும் பங்கு உண்டு. இத்துடன் வெளி.10:6-ன் படி ஏழாம்சபைக்கால தூதன், சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமுக்கும் பங்கு உண்டு.

5. அப்.யோவான் வெளி.1:2 ல் நான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவிக்கிறேன் என்கிறான். அப்படியானால் அது யாருக்கு சாட்சியாக? நமது மத்தியில் உள்ள தென் இந்திய திருச்சபை, தி பெந்தெகொஸ்தே சபை, அசெம்ளி ஆப் காட் சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை, அப்போஸ்தலசபை, கிறிஸ்து சபை போன்ற ஆயிரக்கணக்கில் நம் மத்தியில் உள்ள சபைகளுக்கு அல்ல. ஏனென்றால் இவைகளுக்கும் தேவனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இவைகள் தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் விரோதமானவைகள். பரிசுத்த வேதாகமம் இவைகளை கோதுமையுடன் வளரும் களை என்கிறது. அப்படியானால் இதனுடைய முடிவு என்ன? அறுப்புகாலத்தில் இவைகளை பிடுங்கி சுட்டெறிக்கிறதற்காக கட்டுகளாக கட்டுவார்கள். நம் மத்தியில் உள்ள இந்த ஆயிரக்கணக்கான சபைகள் யாவும் கட்டுகட்டாக கட்டப்பட்டு, முடிவில் அவைகள் சுட்டெறிக்கப்படும். ஆனால் கோதுமை மணியோ (இயேசு கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினால் சம்பாதித்த சபை / கிறிஸ்துவின் சரீரமாகிய சபை) களஞ்சியத்தில் சேர்க்கப்படும். இது அப்போஸ்தலர்களின் காலம்முதல் அதாவது சபை ஆரம்பிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாள் முதல் தேவனுடைய வார்த்தையை கேட்டு, அதை இருதயத்தில் விசுவாசித்து, அதனால் உள்ளத்தில் குத்தப்பட்டு மனந்திரும்பி தங்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, ஜலத்தினாலும் ஆவினாலும் பிறந்து, தேவனுடைய சபையாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்ட ஜனங்கள். இவர்களையே கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். அவரே அதற்குத்தலை. அது வேறு எந்த தலையையும் ஏற்றுக்கொள்ளாது. அது தன் தலையாக நம் மத்தியில் உள்ள போப், பிஷப், சபைத்தலைவர் போன்ற பதவியில் உள்ளவர்களை ஏற்றுக்கொள்ளாது. இந்த சபைக்குத்தான் சாட்சியாக அறிவிக்கும்படி யோவானுக்கு தெரிவிக்கப்பட்டது.

6. இந்த வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சத்தியங்களை மானிட அறிவும், ஆராய்ச்சியும் கொண்டு அறிந்து, புரிந்துக்கொள்ள முடியாது. இதை எனது ஸ்தாபனசபை சகோதரர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். சில சகோதரர்கள் என்னிடம் சகோதரரே நீங்கள் எழுதும் அறிவுரைகளை / செய்திகளை நான் இரண்டு / மூன்று முறை படித்து, அதன் கருத்துக்களை தியானிப்பது உண்டு. அதில் தேவையான புஷ்டியுள்ள ஆகாரம் ஆத்துமாவுக்கு உண்டு என சாட்சி கூறுகிறார்கள். சொல்நயம் கொண்டு, சாதூரியமான பேச்சினால் மக்களை கவரும் ஊழியக்காரர்கள் உலகலாவிய வானொலி, தொலைக்காட்சி, ஒலி, ஒளிபரப்புகள், பலகோடி மதிப்புள்ள கட்டிடங்கள் மற்றும் இவ்விதமான காரியங்களை அவர்கள் பெரிதாக நினைக்கிறார்கள். ஆனால் அவைகள் யாவும் தேவனுடைய பார்வையில் மதியீனமானது. பைத்தியமாய் தோன்றுகிற பிரசங்கத்தினாலே, விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று. (1கொரி.1:21) மேலும் நமது மத்தியில் ஒவ்வொரு ஸ்தாபன சபையும் தங்களுடைய வேதாக கல்லூரிகளைக் கொண்டுள்ளார்கள். எதற்கு? தங்கள் சபை உபதேசங்களை, போதனைகளை, கருத்துக்களை, கோட்பாடுகளை ஊழியர்களுக்கு போதித்து, பின் அவர்கள் மூலமாக சபைமக்கள் மீது அதை திணிக்க, அவர்களின் படிப்புகளுக்கு B.Th, M.Th, B.D., M.D., D.D., போன்ற பட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட பட்டங்களைக் கொண்டு Rev, Rt, Most Rev. Pope, Cardinal, சபைஸ்தாபகர், தலைமை போதகர், இன்டர்நேஷனல் பிரசங்கி போன்ற பதவிகள் கிடைக்கின்றன. சிலர் மேற்கூறிய படிப்புகள் இல்லாவிட்டாலும் தங்களுக்கென்று பிரத்தியேகமான பதவிகளை தாங்களே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். மேலும் சிலர் வெள்ளைநிறத்தில் அங்கி, ஜிப்பா, குர்தா போன்ற ஆடைகளை அணிந்துக்கொண்டு தங்களை மிக்க பரிசுத்தவான்களாக காட்டிக்கொள்கிறார்கள். மேலும் தாங்கள் வெளி.7:9,14:1-5ல் கூறப்பட்டுள்ள வெள்ளை அங்கி தரித்தவர்கள் எனவும் தங்களை தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். சிலர் தங்களை அப்போஸ்தலன், தீர்க்கத்தரிசி, சுகமளிக்கும் வரம் பெற்றவர், தீர்க்கதரிசன வரம் பெற்றவர் என வீனாய் விளம்பரப்படுத்தி கொள்கிறார்கள். உண்மையாகவே இவர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சத்தியங்களை அறிந்து, புரிந்துக்கொள்ளவில்லை, அவர்களால் அது கூடாது. அதாவது ஒருவன் தனது படிப்பு, அதனால் பெற்ற அந்தஸ்து, பதவிகளைக் கொண்டு வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள எதையும் அறிந்துக்கொள்ள முடியாது. ஆனால் அவர்கள் ஒன்றே ஒன்று செய்யலாம். அதாவது தங்களது படிப்பு பட்டம் பதவிகளைக் கொண்டு தங்களை மேன்மைப்படுத்தி, பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை சொல்லி, அவர்களை வஞ்சித்து தங்களது இப்பிரபஞ்சத்தின் பிழைப்பை ஆடம்பரமாக நடத்தலாம். பாருங்கள் வெளிப்பாடு என்பது ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு அதாவது ஒன்றும் அறியாத பேதைகளுக்கு அதாவது தங்கள் ஞானத்தைக்கொண்டு பெருமை பாராட்டாதவருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு வேத மாணாக்கன் செய்வது போன்று நாம் இந்த புஸ்தகத்தில் உள்ள வெளிப்பாடுகளின் அர்த்தத்தை அறிய இயலாது. அவர்கள் வசனத்தோடு வசனத்தை ஒப்பிட்டு அதனை வெளிப்பாடு என்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. ஒருமுறை தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் வேலை செய்யும் ஒரு பொறியாளர் மறைந்த சகோ.D.G.S. பிரசங்கத்தைக்கேட்டு பின் என்னை சந்திக்கும் வேளையில், பாருங்கள் அவருக்கு என்ன வெளிப்பாடு, பிரசங்கத்தில் வேதவாக்கியங்களை / வார்த்தைகளை எவ்வளவு சரளமாக எடுத்து பயன்படுத்துகிறார். தேவன் அவருக்கு அவைகளை அந்த சமயத்தில் வெளிப்படுத்துகிறார் அல்லவா என்றார். நானோ அவர் அறியாமைக்கு மனம் வருந்தினேன். அவரிடம் அப்படியல்ல, ஒத்தவாக்கிய அகராதி என்று ஒன்று உள்ளது. அதில் தேவனுடைய வார்த்தையில் உள்ள ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு அதற்கு ஒத்ததான வசனங்கள் எங்கெங்கு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க முடியும். ஆதலால் பிரசங்கிகள் தங்களது பிரசங்க குறிப்புகளை அப்படிப்பட்ட ஒத்துவாக்கிய அகராதிகளிலிருந்து எடுத்துவைத்து அதை தங்கள் பிரசங்க நேரத்தில் பயன்படுத்துகிறார்கள் எனக்கூறினேன். என்னிடம் உள்ள அப்படிப்பட்ட ஒத்துவாக்கிய அகராதி ஒன்றையும் எடுத்துக்காட்டினேன். அதன்பின் அவர் தன் எண்ணத்தை மாற்றினார்.

7. வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சத்தியங்களை நாம் அறிந்துக்கொள்ள ஒரேஒரு வழிதான் உண்டு. அதற்காக ஒருவன் ஆவிக்குள்ளாக வேண்டும். தேவன் அந்த நபரை அதற்கென்று ஆவிக்குள்ளாக்க வேண்டும். அது ஒனறே காரியம். அது நம்முடைய கரத்தில் இல்லை. நம்மை ஆவிக்குள்ளாக்குகிறவர் தேவன். ஆம் ஆவியானவர்தாமே வேதவாக்கியங்களின் பொருளை, கருத்தை நமக்கு வெளிப்படுத்திக்காட்ட வேண்டும். தேவனுடைய ஆவியினாலேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். (1கொரி 2:11). தேவன் தம்முடைய இரகசியங்களை யாருக்கு வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ, அவனேயன்றி ஒருவனும் அவைகளை அறியமாட்டான். பிதாவே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். (மத்.11:25) பாருங்கள் ஒருவன் ஆவிக்குள்ளாக்கப்பட்டு அப்.2:38-யை தியானிப்பானாகின், அவன் பரிசுத்த ஆவியை பெற, முதலில் தன் பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும். தான் பாவங்களின் மன்னிப்புக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும், அப்பொழுது தேவன் தன்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பி, தம்முடைய வாக்குதத்தத்தை நிறைவேற்றுவார் என அறிவான். மற்றபடி அவனுடைய எந்த சுயமுயற்சியினாலும் அறியவே மாட்டான். ஸ்தாபன சபைகள், அதன் பணிவிடைக்காரர்கள் இந்த சத்தியத்தை அறிந்துக்கொள்ளவே முடியாது. ஆனாலும் அதில் விதிவிலக்கு உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது. ஸ்தாபன சபை மற்றும் அதன் ஊழியகாரர்களை இயக்கும் சக்தி பிசாசு / சாத்தான். ஏனென்றால் அவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள். அப்.

2:38 உபதேசத்தை ஸ்தாபனசபை, அதன் ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு அதுவே காரணம். பாருங்கள் இந்த உலகமானது பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. ஆதலால் இவர்கள் இந்த உலகத்தின் ஆவிக்குள்ளாகவே காணப்படுகிறார்கள்.

8. பாருங்கள் நம்மை பின்பற்றாத ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறதைக் கண்டோம். (மாற்.9:38,39) அவர்கள் ஒருநாளில் கர்த்தரிடம் : உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா என்பார்கள். அவர் : நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை : அக்கிரமசெய்கைகாரர்களே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்பார். (மத்.7:22,23) ஆம், தேவன் தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணுறார். நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் தமது மழையை பெய்யப்பண்ணுகிறார். (மத்.5:14) கவனியுங்கள். தேவனுடைய ஆவி நல்லோர்மேலும், தீயோர் மேலும் விழுந்து தேவனுடைய திட்டங்களை நிறைவேற்றுகிறது. ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெறவில்லை. மாறாக பரிசுத்த ஆவி அவர்கள் மேல் விழுந்து கிரியை செய்தது. அதுதான் காரியம். ஸ்தாபனசபை ஊழியர்களின் நிலை இதுவே. ஆதலால் ஸ்தாபனசபை ஊழியர்கள் பரிசுத்த ஆவியை பெற்று அற்புத அடையாளங்களை செய்கிறார்கள் என்று நினைத்து விடாதீர்கள். அவர்கள் பரிசுத்தஆவியை பெற்றவர்களானால் பரிசுத்த வேதாகமத்தில் தேவஆவியினால் அருளப்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆமென் என்பார்கள். அதனோடு ஒன்றை கூட்டவும் குறைக்கவும் மாட்டார்கள். தங்கள் சொந்த கருத்தை தேவனுடைய வார்த்தைக்கு கொடுக்கவும் மாட்டார்கள். பரிசுத்த வேதாகமும் ஏற்கெனவே வியாக்கியானம் செய்யப்பட்ட ஒன்றாகும்.

9. யோவான் தேவவசனத்தின் நிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியின் நிமித்தமும் சிறைப்பட்டிருந்தான். அவன் சிறையில் இருந்தபோது அதிகாரிகள் அவனை கொதிக்கும் எண்ணெய்யில் 24 மணிநேரம் மூழ்கியிருக்க வைத்தார்கள். ஆனால் அவனோ தேவகிருபையால் மரிக்கவில்லை. அவனுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை. ஆதலால் அவனை மந்திரவாதி என்று குற்றம்சாட்டி, பத்மு தீவில் சிறைப்படுத்தினார்கள். எபேசு பட்டிணத்திலிருந்து பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டான். அது ஏசியன் கடற்கரையிலிருந்து சுமார் 30 மைல் அப்பால் உள்ளது. அது கற்பாறைகளும் விஷஜந்துக்களும் நிறைந்த தீவு. ரோம சாம்ராஜ்யம் மரணத்திற்கேதுவான குற்றம் செய்தவர்களையும், அரசியலில் ஈடுபட்ட குற்றவாளிகளையும் இந்த தீவுக்கு நாடுகடத்துவது வழக்கம். யோவான் கி.பி. 95,96 ஆக இரு ஆண்டுகள் இங்கு இருந்தான். அப்பொழுது அநேக தரிசனங்களின் முகாந்தரமாய், இயேசு கிறிஸ்துவைக்குறித்த வெளிப்பாடுகளை பெற்றான்.

10. யோவான் பத்மு தீவில் இருக்கையில் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானான். அதாவது யோவான் பத்மு தீவிலிருந்து, தேவனுடைய ஆவியினால், கர்த்தருடைய நாளுக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டான். கர்த்தருடைய நாளானது இனிவரப்போகும் ஒன்றாக இருக்கிறது. அந்த நாளுக்குள் அவன் தேவஆவியினால் எடுத்துக்கொள்ளப்பட்டான். கர்த்தருடைய நாள் அவருடைய வருகையின் நாள். அது அவருடைய நியாயத்தீர்ப்பின் நாள். (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், முதலாம் பாகம், பத்மு தீவு தரிசனம், பக்கம் 169, பத்தி 131, நாள் 04-12-1960) இயேசு ஒலிவமலையில் உட்கார்ந்துக் கொண்டு அந்தநாளையும், அந்தநாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்தில் உள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார். என பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயாவிடம் கூறியதாகும். (மாற்.13:32) இது ஏழாம் முத்திரைக்கடுத்த சம்பவம். வெளி.1:14-ல் யோவான் இயேசுவை நியாயாதிபதியாக காண்கிறான். கவனியுங்கள், யோவான் பத்மு தீவில் ஆவிக்குள்ளாக மாற்றப்பட்டு, கர்த்தருடைய நாளுக்குள் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு ஒரு எக்காள சத்தம் போன்ற ஒரு பெரிதான சத்தத்தைக் கேட்கிறான். இந்த தரிசனத்தில் யோவான், இயேசுவை ஒரு ஆசாரியனாக, ராஜாவாக, தீர்க்கதரிசியாக காணவில்லை. மாறாக அவரை ஒரு நியாயாதிபதியாக காண்கிறான். இயேசு ஒரு நீதிபதியை போன்று, இடுப்புக்கு மேலே மார்பருகே கச்சை கட்டி நீதிபதிகள் தோளிலே போட்டுக்கொள்ளும் கச்சையோடு, அவர் நீதிபதிகள் அணியும் வெண்பனியைப் போன்ற வெண்மைநிறமுள்ள குல்லாவை / தொப்பியை அணிந்தவராக நிற்க கண்டான். இப்பொழுது காண்பீர்களானால் யோவான் இயேசு நீதிபதியாக வருகிறதை காண கர்த்தருடைய நாளுக்குள்ளாக எடுத்துக்கொள்ளப்பட்டான். பத்மு தீவில் யோவான் கடந்த, நிகழ், வருங்கால நிகழ்ச்சிகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டான். அதுவும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று. பாருங்கள் யோவான் ஏழு பொன்குத்துவிளக்குகள் மத்தியிலே மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை (One like the Son of man) கண்டான். (வெளி.1:12,13) ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம். (வெளி 1:20) ஆக ஏழு சபைகளின் மத்தியில், மனுஷகுமாரன் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதா, குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். (யோ. 5:22) உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாந்தீர்க்க போகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (2தீமோ.4:1) நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது. (1பேது.4:17) ஆதலால் ஏழு சபைக்காலங்களின் மத்தியில் இயேசுகிறிஸ்து காணப்படுகிறார். இன்னும் அந்த நியாயத்தீர்ப்பு வரவில்லை, ஆதலால் அவரை யோவான் மனுஷக்குமாரனுக்கு ஒப்பானவராக காண்கிறான்.

11. பத்மு தீவில் யோவான் ஆவிக்குள்ளாகி, கர்த்தருடைய நாளுக்கென்று கொண்டுப்போகப்பட்டான். அப்பொழுது தனக்கு பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டான். அதுநான் அல்பாவும், ஒமெகாவும் முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி அதை

ஆசியாவில் இருக்கிற எபேசு, சிமீர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களில் உள்ள ஏழு சபைகளுக்கு அனுப்பு என்று விளம்பினது. (வெளி.1:10,11) இந்த ஏழுசபைகளும் தங்களுடைய விசேஷித்த தன்மைக்கென்று பொறுக்கி எடுக்கப்பட்டு, இவைகளின் தன்மைகள், பல நூற்றாண்டுகள் கழித்து படிப்படியாய் தோன்றின ஏழு சபைகளின் காலங்களிலும் காணப்பட்டன. முதலாம் நூற்றாண்டு தொடங்கி தற்போதைய காலம்வரை தொடர்ச்சியாக இந்த சபைகளின் தன்மைகளை முன்கூட்டியே அறிவித்தன.

12. இப்பொழுது கவனியுங்கள். கி.பி. 53-170 வரை உள்ள காலக்கட்டங்களில் காணப்பட்ட சபை, இங்கு உள்ள எபேசு சபையின் குணாதிசயங்களை பெற்றதாயிருந்தது. அதன்பின் கி.பி.170-312 வரை உள்ள காலகட்டங்களில் எழுந்தசபை, இங்கு கூறப்பட்டுள்ள சிமீர்னா சபையின் பண்புகளை கொண்டதாக இருந்தது. மூன்றாவதாக கி.பி.312-606 ல் தோன்றிய சபைநிலை இங்கு சித்தரிக்கப்பட்ட பெர்கமு சபையின் கிரியைகளை கொண்டதாகயிருந்தது. நான்காவதாக கி.பி.606-1520 ல் எழும்பிய சபை நிலை இங்கு சொல்லப்பட்ட தியத்தீரா சபையின் செயல்பாடுகளை கொண்டதாகயிருந்தது. ஐந்தாவதாக கி.பி. 1520-1750 ல் வரையுள்ள காலக்கட்டத்தில் காணப்பட்ட சபையின் நிலை இங்கு கூறப்பட்ட சர்தை சபையின் தன்மைகளை கொண்டதாகயிருந்தது. ஆறாவதாக கி.பி. 1750-1906 ல் வரையுள்ள காலங்களில் தோன்றிய சபை இங்கு நாம் காண்கிற பிலதெல்பியா சபையின் ஆசாரங்களை கொண்டதாகயிருந்தது. முடிவாக 1906-க்கு பிறகு நம்மத்தியில் எழுந்த சபை அன்று கூறப்பட்டுள்ள லவோதிக்கியா சபையின் பரிதபிக்கப்பட்ட நிலையை கொண்டதாக இருக்கிறது என்பதை நமது கண்களால் காண்கிறோம்.

13. ஆக யோவான் எழுதிய ஏழு சபைகளும் ஆசிய மைனரில் உள்ள புறஜாதிகளின் சபைகளாகும். இவன் பெரும்பாலும் யூதர்களைக் கொண்ட எருசலேமில் உள்ள சபைகளுக்கு எழுதவில்லை. காரணம் என்னவென்றால் தேவன் யூதர்களை விட்டு புறஜாதிகளிடத்தில் திரும்பி, சபைகளின் காலங்களில் புறஜாதிகளோடு சம்பந்தம் கொண்டு, புறஜாதி மணவாட்டியை தெரிந்துகொள்கிறார். புறஜாதிகளின் நிறைவு சபைக்காலங்களின் முடிவில் உண்டாகும்.

14. அப்.பவுல் எபேசு சபைக்கு தூதனாயிருந்தான். புறஜாதிகளின் காலத்தின் முதல்சபைக்கு அவன்தூதனாக நியமிக்கப்பட்டான். புறஜாதிகளுக்கு முதன்முதல் சுவிசேஷத்தைக்கொண்டுச்செல்லும் அதிகாரம் அப்.பேதுருவுக்கு கொடுக்கப்பட்டாலும் அதனுடைய அப்போஸ்தலனும் தீர்க்கதரிசியுமாய் இருக்கிற சிலாக்கியம் அப்.பவுலுக்கு கொடுக்கப்பட்டது. இரேனியஸ் என்பவர் சிமீர்னா சபையின் தூதனாகயிருந்தார். இவர் பாலிகார்ப் என்பவரின் சீடன். பாலிகார்ப் யோவானின் சீடனாயிருந்தார். இவர்கள் தேவனுடைய வெளிப்படுத்துதலினால் அப்.பவுல் பிரசிங்கித்த அதே சுவிசேஷத்தை சபையின் காலங்கள் தோறும் பிரசங்கித்தவர்களாயிருந்தார்கள். பெர்கமு சபையின் தூதனாக, அப்.பவுலின் ஊழியத்திற்கு ஒத்த ஊழியம் செய்த மார்ட்டின் என்பவர் ஆவார். இவர் தேவனுடைய வார்த்தையில் உறுதியாய் நிலைநின்று ஸ்தாபனங்களை எதிர்த்து மேலிடங்களில் உள்ள பாவங்களை கண்டித்து உணர்த்தினார். நாமோ தேவனுடைய வார்த்தையை பிரசிங்கிக்காமல் நம்முடைய சபை தத்துவங்களைக் குறித்தும், பிரமாணங்களை குறித்தும், கொள்கைகளை குறித்தும், இன்னும் நம்முடைய அநேக திட்டங்களை குறித்தும் தேவன் பெயரில் பிரசங்கிக்கிறோம். தேவனுடைய வார்த்தையை நமது முதுகுக்கு பின்னால் எரிந்து விட்டோம். தியத்தீரா சபையின் தூதன் பரி.கொலம்பா. இவர் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் வேதஅறிவை அதிகமாக பெற்று கொஞ்சம் குறைய வேதபுஸ்தகம் முழுவதையும் மனப்பாடம் செய்தார். இவர் ஆதி அப்போஸ்தலர்களுக்கு அடுத்தபடியாக வல்லமை பெற்றிருந்தார் என கருதப்படுகிறது. சர்தை சபையின் தூதனாக மார்ட்டின் லூதர் விளங்கினார். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்னும் சத்தியத்தை போதித்தார். கிரியைகளினால் மனிதன் இரட்சிக்கப்பட முடியாது, விசுவாசத்தினால் மாத்திரமே அவன் இரட்சிப்பை பெற முடியும் என்ற சத்தியத்தை போதித்தார். பிலதெல்பியா சபையின் தூதன் ஜான் வெஸ்லியாக இருந்தார். அப்.யாக்கோபுவை போன்று நித்திய ஜீவனுக்கென்று விசுவாசத்திலும், விசுவாசத்தின் கிரியைகளிலும் இவர் நம்பிக்கை கொண்டிருந்தார். ஒருவன் போதகத்தை ஏற்றுக்கொள்வதோடு மாத்திரம் அல்ல. அதை நடைமுறையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இவர் தேவனுடைய வல்லமையில் விசுவாசம் கொண்டு, ஜெபத்தின் மூலம் அநேக பிணியாட்களை சொஸ்தமாக்கினார். லவோதிக்கேயா சபையின் தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்பதை நாம் அறிவோம். பொதுவாக ஏழுசபைக்காலங்களிலும் அதன் தூதனாக அனுப்பப்பட்ட நபரை பொதுமக்கள் அறிந்துக்கொள்ளவில்லை. ஆனாலும் அங்குள்ள தேவனுடைய வித்துக்களே தேவன் அனுப்பிய அந்த தூதனை அடையாளம் கண்டுகொண்டார்கள். இந்த லவோதிக்கேயா சபையின் தூதன் ஒரு தீர்க்கதரிசி. ஏனென்றால் ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களில் அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவஇரகசியங்கள் நிறைவேற வேண்டும். (வெளி.10:6) மல்கியா 4-ம் அதிகாரத்திலும், வெளி 10:6 லும் உரைக்கப்பட்ட இந்த தூதன் இரு பெரிய காரியங்களை சாதிப்பார். மல்கியா உரைத்தபடி இவர் பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி 10ல் கூறப்பட்டிருக்கும் ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை சபைக்கு வெளிப்படுத்துவார். இந்த சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பும். திருப்பிக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாக காண்கிறோம்.

15. வெளி 2-ஆம் அதி முதல் 3-ஆம் அதி முடிய, ஏழு சபைகளின் தூதர்களுக்கு மட்டுமே அந்த செய்தி உரியது. அது சபைக்காலங்களுக்கு பொருந்தாது என சில படித்த மனிதர்கள் கூறுகிறார்கள். இது தவறு. ஏனென்றால் ஆரம்பத்தில் சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்று கூறினாலும், முடிவு ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூறி, ஜெயம் கொள்ளுகிறவனுக்கு அவனுக்குரிய வெகுமதி கூறப்பட்டுள்ளது. ஆதலால் ஒவ்வொரு சபைக்கால தூதனுக்கும் எழுதிய காரியம் அந்தந்த சபைக்காலத்திற்குரிய செய்தியாகும். அந்த செய்தியை கேட்டு அதன்படி தங்களை காத்துக்கொள்கிறவர்களுக்கு வெகுமதி உண்டு. அவர்களே ஜெயம் கொள்கிறவர்கள்.

16. இப்பொழுது இங்கு நான் அன்றைய லவோதிக்கேயா சபையின் கிரியைகள், இக்காலத்தில் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சபையின் கிரியைகளோடு ஒத்துப்போவதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதிலிருந்து நாம் அன்றைய லவோதிக்கேயா சபையின் காலத்தில் இன்று வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பதை காணலாம். அன்றைய லவோதிக்கேயா சபையின் காரியங்களை 1906க்கு பின் நமது மத்தியில் எழும்பிய சபைகளில் காணலாம். வெளி.3:15,16 : இது நமது மத்தியில் உள்ள சபைகளின் வெதுவெதுப்புத் தன்மைகளை உரைக்கிறது. இந்த வெதுவெதுப்புத் தன்மைகளின் நிமித்தம் தம்முடைய வாயிலிருந்து அவர்களை வாந்திப்பண்ணி போடுவேன் என ஆவியானவர் கூறுகிறார். அவர் வாந்திப்பண்ணிப்போட நாம் தேவனுடைய வாயினுள் இருக்கிறோம் என்று வேதவாக்கியங்களில் எங்கும் கூறப்படவில்லை. மாறாக நாம் அவருடைய உள்ளங்கையில் வரையப்பட்டியிருக்கிறோம். அவருடைய மடியில் இருக்கிறோம், அவருடைய மந்தையாக நாம் புல்லுள்ள இடங்களில் மேய்கிறோம் என வேதவாக்கியங்களில் காண்கிறோம். அப்படியானால் அவருடைய வாயில் என்ன இருக்கிறது? அது வார்த்தை. பாருங்கள் மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (மத்.4:4) அப்படியானால் சபையின் வாயில் வார்த்தையிருக்க வேண்டும். ஒருவன் போதித்தால் தேவனுடைய வார்த்தையின்படி போதிக்க கடவன். (1பேது.4:11) அப்படியானால் இந்த சபைகாலத்தில் மக்களிடத்திலே காணப்படும் குறை என்ன? அவர்கள் வார்த்தையை விட்டு விலகி போனார்கள். மனுஷருடைய கற்பனைகளுக்கும், பிரமாணங்களுக்கும் கீழ்படிகிறவனார்கள். ஸ்தாபன சபைகளின் கோட்பாடுகளுக்கு, போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கலானார்கள். தேவனுடைய வார்த்தையை குறித்ததான பக்தி வைராக்கியம் அவர்களிடத்தில் இல்லை. மாறாக இக்கால மக்கள் அவர்கள் சார்ந்திருக்கும் சபையை குறித்து, அவர்களை வழிநடத்தும் அவர்களுடைய மேய்ப்பனைக்குறித்தே பக்தி வைராக்கியம் கொண்டவர்களாயிருக்கிறார்கள். பாருங்கள் நான் CSI, CPM, AG, TPM, AC, Catholic, மணவாட்டிசபை அங்கத்தினன் எனக்கூறி அதில் பெருமை பாராட்டுகிறார்கள். அவைகளின் உபதேசங்களே அவர்களுக்கு வெளிச்சமாயிருக்கிறது. வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பித்தலுக்குமென்றே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கண்டுகொள்வதில்லை. மாறாக ஸ்தாபனசபை உபதேசங்களை கைக்கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறார்கள். இது எங்கள் சபை, எங்கள் பாஸ்டர் இதைத்தான் கூறுகிறார், அப்படித்தான் போதிக்கிறார் என்கிறார்களேயன்றி தேவனுடைய வார்த்தை என்னகூறுகிறது என்பதை கண்டுக்கொள்வதே இல்லை. ஒருவனுக்கு தென் இந்திய திருச்சபையின் போதகமே வேதவாக்கு. மற்றொருவனுக்கு தி பெந்தெகொஸ்தே சபை உபதேசமே வேதப்பிரமாணம். மூன்றாவது நபருக்கு அசெம்ளி ஆப் காட் மூல உபதேசமே தேவனுடைய கற்பனைகள். இவ்வாறாக மக்கள் ஸ்தாபன சபைகளின் உபதேசங்களை நம்பி மோசம் போனார்கள். தேவனுடைய வார்த்தையை தங்களுடைய முதுகிற்கு பின்னால் எறிந்துவிட்டார்கள். பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசமாகிய ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ; ஒரே ஞானஸ்நானம், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்பதை மறைத்து மாறுபாடானவைகளை உபதேசித்து விசுவாச கப்பலை சேதப்படுத்திவிட்டார்கள். விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள். தேவனுடைய வார்த்தைக்கு மேலாக ஸ்தாபன சபைகளின் உபதேசங்களுக்கு, போதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கலானார்கள். ஆதலால் தேவன் சபையை பார்த்து நான் உங்களை என் வாயிலிருந்து வாந்திபண்ணி போடுவேன். ஸ்தாபன சபைகளை புறம்பாக்குவேன் என்கிறார். பாருங்கள் இன்றைய ஸ்தாபன சபைகள் தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு போதிப்பதில்லை. மாறாக தங்களுடைய சொந்த போதகத்தையே போதிக்கிறார்கள். ஆதலால் அவர்களை தேவன் தம்முடைய வாயிலிருந்து வாந்திப்பண்ணி போடும் நிலையில் இருக்கிறார்கள். ஆம் சபையின் கிரியைகளின் நிமித்தமாக தேவன் அவர்களை விட்டு விலகிப்போய் விட்டார். இன்று அவர் சபைக்கு வெளியே நிற்கிறார்.

17. அடுத்து வெளி.3:17யை தியானிப்போம். இங்கு எனக்கு ஒரு குறைவும் இல்லை என்று சொல்கிறபடியால் அதைக்குறித்து சிந்திக்க வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது. சபைகள் இக்காலத்தில் ஐசுவரியம் உள்ளதாய் விளங்குகிறதைப்போன்று எந்தவொரு காலத்திலும் இல்லை. கோடிகணக்கில் பணம் செலவுசெய்யப்பட்டு கட்டிய அழகான, ஆடம்பரமான ஆலயங்கள், சபைகளில் லெக்கின்ஸ் ஆடைகள் அணிந்த வாலிப பிள்ளைகளை கொண்ட பாடல் குழுக்கள், அனைத்து சபைகளும் தங்களுக்கென்று கோடிக்கணக்கில் சொத்து செல்வங்களை சேர்த்து வைத்துள்ளனர். அவைகளின் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பொது மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் மூலம் கோடிக்கணக்கில் வருமானம். நாடுகள் பல சென்று அங்கு ஜெப கோபுரங்களை கட்டி வாடகைக்கு விட்டு, அதில் வருமானம். லோக்கல் சபைகள் மூலம் லட்சக்கணக்கில் தசமபாகம் மற்றும் காணிக்கை என்ற பெயரில் வருமானம்.

லெக்கின்ஸ் ஆடைகளை அணிந்து, இடுப்புக்கு கீழ் உள்ள முன்பின் சரீர பகுதியின் கட்டமைப்புகளைக் காட்டி மானம், மரியாதை, சூடு சுரனை எதுவும் இல்லாது, தங்களது சபைகளில் உள்ள இளம்வாலிப பெண் பிள்ளைகளை, துள்ளிகுதித்து, ஓடி ஆட, பாடவைத்து, அதை காண்பவர்கள் உள்ளத்தில் இச்சைகளை உண்டுபண்னி, டிவிடிகளில் இவைகளை கொண்டுவந்து அதைவிற்று அதன்மூலம் நல்ல வருமானம். அதாவது களியாட்டங்களின் மூலம் வருமானம். இவைகள் யாவும் கலா.5:21 ல் கூறப்பட்டுள்ள களியாட்டங்களேயன்றி (Reveling) வேறொன்றும் இல்லை. நீங்கள் நன்கு கவனித்தீர்களானால் இன்றைய கிறிஸ்தவ மார்கம் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக திகழ்கிறது. மேலும் சபை ஐசுவரியவான்களையும், சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்களையும், அரசியல்வாதிகளையும், சினிமா துறையில் உள்ள நடிகர், நடிகைகளையும், ஞானிகளையும், கல்விமான்களையும் வசீகரித்து பெருமை பாராட்டுகிறது. இவர்களால் நாளுக்கு நாள் தேவனுடைய சபையில் வல்லமை குறைந்துக்கொண்டே வருகிறதை நாம் நாளுக்குநாள் நமது கண்களினால் காண்கிறேம்.

18. மேலும் இக்காலத்தில் ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து ரேடியோ, டிவிகளில் அநேக நிகழ்ச்சி நிரல்கள் நடத்தப்படுகின்றன. அவைகளில் உண்மைக்கு புறம்பாகவே அநேக நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன. கவர்ச்சி விளம்பரங்களினால் சபைகளில் அங்கத்தினர்கள் அதிகரிக்க அதிகரிக்க, செல்வமும் சம்பத்தும் அதிகரிக்கின்றன. பணஒத்தாசையின்றி பரிசுத்த ஆவியை முற்றிலும் சார்ந்து, ஆதி அப்போஸ்தலர்களின் காலத்தில் நடந்த மகத்தான ஊழியத்தை இன்று காணமுடியவில்லை. இன்று சபைகளில் யாராகயிருந்தாலும், ஒரு ஊழியக்காரனோ அல்லது ஒரு விசுவாசியோ அங்கு பணத்திற்காகவே பணிபுரிகிறார்கள். ஊழியம் செய்யாமல் ஊதியம் கொள்ளவே வந்துள்ளார்கள். கேளிக்கை விருந்துக்காக படங்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்களாக, இயக்குனர்களாக ஊழியர்கள் தங்களை மாற்றிவிட்டார்கள். இதில் நாலுமாவடி சகோ. மோகன் சி லாசரஸ் மற்றும் சென்னை, சின்னமலை பாஸ்டர். மோகன், ஏஞ்சல் டிவி சகோ.சாது செல்வராஜ் போன்றவர்கள் விதிவிலக்கல்ல. ஆனால் தங்களுடைய பணி தேவனுடைய அழைப்பு எனக்கூறி தங்களை தாங்களே ஏமாற்றி கொள்கிறார்கள். பிறரையும் வஞ்சிக்கிறார்கள். ஆக ஐசுவரியம் பெருத்த கத்தோலிக்க, தென் இந்திய திருச்சபை, அசெம்ளி ஆப் காட் போன்ற சபைகளில் தேவனுடைய வல்லமை எதுவும் காணப்படாமல் வியாபாரமே அங்கு நல்ல முறையில் நடந்து வருகிறது. ஒரு சபையில் தேவன் தம்முடைய ஆவியினால் அசைவாடுகிறாரேயன்றி சபையில் காணப்படும் செல்வத்தைக்கொண்டும், ஊழியர்களின் பேச்சுத்திறமைகளைக் கொண்டும் அசைவாடுவதில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் நிச்சயமாக பெறவேயில்லை. பரிசுத்த ஆவி அவர்கள் மீது விழுந்து கிரியை செய்யலாம். அந்த கிரியை அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதிற்கு அடையாளம் இல்லை. ஐசுவரியவான்களையும், அரசியல் மற்றும் சினிமா துறையில் உள்ளவர்களையும் அங்கத்தினர்களாக தங்கள் சபைகளில் சேர்க்க சபை மிக்க அரும்பாடுபடுகிறது. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேகரே! உங்களுக்கு ஐய்யோ. ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றி திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். (மத்.23:15) இதுதான் இன்று சபைகளில் நடைமுறையில் உள்ளது.

19. இப்பொழுது கவனியுங்கள். சபையானது உண்மையாகவே ஆவிக்குரிய பிரகாரம் ஐசுவரியமுள்ளதாயிருப்பின் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு பிஷப்கள் ஜெயிலில் கம்பிகள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். குருமார்கள் சபை சொத்துக்களை கொள்ளையடித்தின்பேரில் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றங்களுக்கு நடைப்பயணம் செய்துக்கொண்டுவருகிறார்கள். தங்கள் வெள்ளை அங்கிகளுடன் தரையில் அமர்ந்து போலீஸ் ஸ்டேஷன் முன்பு யோகாசனம் செய்துவருகிறார்கள். இவர்கள் மத்தியில் மனைவியை தள்ளிவிட்டு மறுமணம் செய்தவர்களும் உண்டு. 2 / 3 மனைவிகளை கொண்டவர்களும் உண்டு. அதாவது பெரியகுடும்பம், சின்னகுடும்பம் நடத்துபவர்களும் உண்டு. லாகிரி பொருட்களை உபயோகிக்கும் தண்ணி வண்டி கேஸ்களும் சபையில் ஊழியர்களாக உண்டு. சபைகளில் காணிக்கையை திருடும் குருமார்களும் உண்டு. தான் சேர்க்கும் சொத்து செல்வங்கள் சபையார்க்கு தெரியக்கூடாது என்று தனது பணிஸ்தலம் அல்லாது இதர இடங்களுக்கு சென்று முதலீடு செய்பவர்களும் உண்டு. ஆக எங்கும் எதிலும் ஊழியத்தின் பேரில் கிறிஸ்துவின் பெயரில் பொய்யைச் சொல்லி கொள்ளையோ கொள்ளை. ஆக இப்படிப்பட்ட ஒழுக்கமற்ற கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சபைகள் எங்கும் நிறைந்திருக்கும் போது அது தன்னைத் தானே இரட்சிக்கப்பட்டவர்களை கொண்ட ஆவிக்குரிய சபை என்று அழைத்துக்கொள்வது அவர்களுடைய ஆவிக்குரிய வருமையை காட்டுகிறதேயன்றி, ஆவிக்குரிய ஐசுவரியத்தை அல்ல. கோடிக்கணக்கானவர்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம், பரிசுத்த ஆவியை பெற்று விட்டோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அங்கு ஆவிக்குரிய கனிகள் காணப்படுவது அறிதாக இருக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன்பிரகாரம் ஜீவிப்பதை காணமுடியவில்லை. ஜீவியத்தில் தேவனுடை வார்த்தையை குறித்த கவலை அவர்களுக்கு இல்லை. உலகம் தான் அவர்கள் உள்ளத்தில் உள்ளது.

20. மேலும் நம் மத்தியில் உள்ள இன்றைய சபைகள் அன்றைய லவோதிக்கேயா சபையில் காணப்பட்டது போன்று எனக்கு ஒரு குறைவும் இல்லை எனக்கூறிகிறது. அப்படியானால் அதனிடம் சகலமும் சம்பூர்ணமாய் உண்டு என்றே அர்த்தம். இது சபையின் திருப்தியுள்ள தன்மையை காட்டுகிறது. பாருங்கள் இன்றைய சபைகள்

தேவனுடைய வெளிப்பாட்டை, கலப்படமற்ற சத்தியத்தை பெற்றுள்ளோம் என்று உரிமை பாராட்டுகின்றன. அதை அவர்களுடைய சபை கோட்பாடு புஸ்தகங்களில் மிகவும் அழகாக எழுதி அதை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டதாக கூறுகிறது. அப்படியானால் முதலாம் நூற்றாண்டு சபையில் காணப்பட்ட அற்புத அடையாளங்கள், விசுவாசம், வல்லமை, ஞானம், தன்னடக்கம், தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு இவர்களிடத்தில் எங்கே? ஆவியின் கனிகளுக்குப் பதிலாக சபையில் மாம்சத்தின் கிரியைகள் தானே காணப்படுகின்றன. அன்று பாவத்தை மேற்கொண்டு பரிசுத்தமடைந்து இயேசு கிறிஸ்துவை மட்டும் நோக்கி சென்ற சபை இன்று சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கைகளையும், பணவரவுகளுக்கடுத்த காரியங்களில் தானே முன்னோக்கி சென்றுகொண்டிருக்கிறது. அன்று விசுவாசிகளிடம் காணப்பட்ட ஒரே இருதயம், ஒரே மனம், ஒற்றுமை இன்று எங்கே? ஆதிசபையின் மேல் காணப்பட்ட தேவனுடைய பரிபூரணமான கிருபை இன்றைய சபைகளின் மேல் எங்கே? தாங்கள் ஒன்றும் இல்லாதிருந்தும், தாங்கள் எல்லாவற்றையும் உடையவர்கள் என கூறிக்கொள்கிறார்கள். தங்களுக்கு ஒரு குறையும் இல்லை என்று பெருமை பாராட்டி கொள்கிறார்கள். நீ எங்களுக்கு சத்தியத்தை குறித்து ஒன்றும் கூறவேண்டிய தேவையில்லை. எங்களுக்கு எல்லாம் தெரியும், போய் ஒரு இந்துவிடம், ஒரு முஸ்லீமிடம் சுவிசேஷம் சொல்லு என்று இறுமாப்பாய் சொல்லுகிறார்கள். ஆனால் தேவனோ அவர்களை குறை உள்ளவர்களாகவே காண்கிறார். பாருங்கள் நீ நிர்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத்தக்கவனாகவும், தரித்திரனாகவும், குருடனும், நிர்வாணியுமாக இருந்துக்கொண்டு உன் நிலையை சரிவர அறிந்து புரிந்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறாய் என்கிறார். இந்த சபைக்காலம் ஆவிக்குரிய நிலையில் மிக்க வருமை அடைந்துள்ளது. ஆனாலும் மக்கள் தங்கள் நிலையை உணராதிருக்கிறார்கள். இவர்கள் வியாதியஸ்தர்களுக்காக ஜெபம் பண்ணுகிறார்கள். வருங்காலங்களில் நடக்கயிருக்கிறவைகளா குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். அந்நிய பாஷைகளை பேசுகிறார்கள். வல்லமையாக ஆடிப்பாடி குதித்து உணர்ச்சிவசப்பட்டு மேடைகளில் பிரசங்கம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் தேவனால் உண்டானவர்கள் அல்ல. உண்மையாகவே இவர்கள் பணம் சம்பாதிப்பதற்கென்று இவைகளை செய்து பாவத்தில் விழுந்து மாய்மாலமாய் ஜீவிக்கிறார்கள். இயேசு அவர்களை நோக்கி உங்களை ஒருக்காலும் அறியவில்லை. அக்கிரமசெய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்கிறார். (மத்.7 22,23)

21. பாருங்கள் ஆவியும், மணவாட்டியும் ஸ்தாபனசபை மக்களை எவ்வளவுதான் எச்சரித்து அழிவுக்கான வழியிலிருந்து விலக வேண்டிக்கொண்டாலும் அவர்கள் எல்லாவற்றையும் நிராகரிக்கின்றனர். அது உண்மையாகவே அவரது பரிதவிக்கப்பட்ட நிலையை காட்டுகிறது. முடிவாக என் ஜனங்களே ஸ்தாபனசபைகளை விட்டு வெளியே வாருங்கள். யோவான் அன்று ஏழு சபைகளைக்குறித்து கண்ட காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறி, நாம் இன்று லவோதிக்கேயா சபை காலத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். அன்று யோவான் ஏழுசபைகளுக்கடுத்து கண்ட தரிசனங்கள் (வெளி.2,3 அதிகள்) நிறைவேறி சரித்திரமாகி விட்டது. நாம் இன்று லவோதிக்கேயாவின் கடைசி நாட்களின் கொடிய காலங்களில் இருக்கிறோம். பாருங்கள் இந்த சபைக்காலத்தில் எங்கும் மனுஷர்கள் தற்பிரியராக, பணப்பிரியராக, பரிசுத்தமில்லாதவர்களாக சுபாவ அன்பில்லாதவர்களாக, இச்சையடக்கம் இல்லாதவர்களாக, தேவபிரியராயிராமல் சுகபோகபிரியராக, தேவபக்தியின் வேஷத்தை தரித்து, அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாக, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதிருக்கிறவர்களாக, சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களாக காணப்படுகிறார்கள். இது நமது மத்தியில் உள்ள சபைகளில் நாம் எங்கும் காணும் காட்சியாகும். ஆனாலும் எங்களுக்கு ஒரு குறைவும் இல்லை. இப்பொழுதும் கர்த்தருடைய வருகைக்கு ஆயுத்தமாயிருக்கிறோம் என பெருமைபாராட்டிக் கொள்கிறார்கள். திருச்சி சகோ.ரூபன், சென்னை சகோ. ஜான் ஐசக் போன்றவர்கள் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, அவர் திருமணம் நடந்து விட்டது என்று கூறவும் துணிந்து விட்டார்கள். இந்த துணிவு அறிவுக்கேற்றது அல்ல. பேய்த்தனத்துக்கடுத்தது. இந்நாட்களில் திருச்சி சகோ. ரூபனோடு கோவை. சகோ.ஆபிரகாம் அமிர்தராஜ், திருப்பூர் சகோ.ஏசுராஜ் மற்றும் சகோ.மத்யூ செல்லப்பா போன்றோர் மற்றும் சென்னை சகோ.ஜான் ஐசக்வுடன் கோவை சுந்தராபுரம் சகோ. லாரன்ஸ் மற்றும் சகோ.ஜோசுவா போன்றோர் கைக்கோர்த்து, ஒருமித்து, ஒருமனப்பட்டு அன்னநடை போடுகிறதை காண்கிறேன். இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? (ஆமோஸ்.3:3) சற்று சிந்தியுங்கள். இது இவர்கள் யார் என்பதை சபைக்கு எடுத்துக்காட்டுகிறது. கண்கள் உள்ளவர்கள் காணக்கடவர்கள்.

22. பிரியமானவர்களே நாம் லவோதிக்கேயா சபைக்கால முடிவில் இருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாக, தலைக்கல் வருகைக்கு எதிர்நோக்கி கொண்டிருக்கிறது. சரீரத்துடன் இணைய தலைக்கல் வந்து கொண்டிருக்கும் நேரத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்று கிரியை செய்துக்கொண்டிருக்கிறது. ஆனால் தலையும் சரீரமும் ஒன்றாக இணையும் போது, பரிசுத்த ஆவியின் முழுவல்லமை அவளை உயிருடன் எழுப்பி, பரிசுத்த அலங்காரத்துடன் வானங்களின் வழியாக எடுத்துச் செல்லும்.

23. இவ்வாறாக இயேசு தம்முடைய தூதனை அனுப்பி, அப்.யோவானுக்கு ஏழு சபைகாலங்களுக்கடுத்த காரியங்களை விவரித்தார். ஏழு சபைகளுக்கும், முதலாவதாக அவர் தன்னைத்தானே யாரென்று வெளிப்படுத்துகிறார். பின்பு சபையின் நிறைவுகளை, குறைவுகளை எடுத்துக்கூறி, மனந்திரும்ப அழைப்புக் கொடுக்கப்படுகிறது. ஜெயம் கொள்ளுகிறவனுக்கு அதற்குரிய வெகுமதி கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு

சபைக்காலத்திலும் ஜெயம் கொள்ளுகிறது யார்? அந்தந்த சபைகாலத்தில் தோன்றும் கிறிஸ்துவின் மணவாட்டி. மனந்திரும்பா விட்டால் அதற்குரிய தண்டனையும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக சபை ஆரம்பமான பெந்தெகொஸ்தே நாள் முதல் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படும் நாள்வரை நடந்த, நடக்கிற, நடக்கப்போகும் சம்பவங்கள் அனைத்தும் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டன. அவன் நமக்கு எழுதி வைத்துள்ளான். ஏழாம் சபைக்கால தூதனும் நமக்கு அதை அவரது செய்தி இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதல் முதல் மற்றும் இரண்டாம் பாகங்களில் விளக்கி கொடுத்துள்ளார்.

24. இனி, இவைகளுக்குப்பின்பு, அதாவது ஏழுசபைக்காலங்களுக்கு அடுத்து யோவானுக்கு என்ன வெளிப்பட்டது என்பதுக்குறித்து காண்போம். என்னுடைய இந்த செய்தி / நிருபம் முற்றிலும் ஏழாம் சபைக்கால தூதன் என்று நான் விசுவாசிக்கும் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் பிரசங்கித்த ஏழு சபைக்காலங்களின் வியாக்கியானம், ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, மற்றும் ஐயன்மீர், இதுவா சமயம்? போன்ற செய்தியை தழுவியதாகவே உள்ளது. வெளி 3ஆம் அதியில் ஏழு சபைகளுக்கடுத்த காரியங்கள் முடிந்து, 4ஆம் அதியில் சபை மேலே செல்லுகிறது. நாம் அதற்காக இந்நாட்களில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். சகோ. பாலாசீர்லாறியின் மணவாட்டி புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ், இவரின் மணவாட்டி திருச்சி சகோ.ரூபன் மற்றும் இவர்களது சகாக்கள் யாவரும் வஞ்சிக்கும் ஆவியை உடையவர்கள் என்பதை ஆவிக்குரியவர்கள் மாத்திரமே அறிவார்கள். இவர்கள் கள்ளகபடமுள்ள, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள் என்பதை கிறிஸ்துவின் மணவாட்டி மாத்திரமே அறிவாள். இவர்களுடைய மாறுபாடான உபதேசத்தால் அநேகர் வஞ்சிக்கப்பட்டார்கள், வஞ்சிக்கப்பட்டும் வருகிறார்கள். திருச்சி சகோ.ரூபன் லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டது என அவருடைய மக்களை நம்பபண்ணச்செய்து வருகிறார். இவரைப்போன்று அநேகர், சொல்லப்போனால் இக்காலத்திற்குரிய செய்தியிலிருக்கும், சகோ. பிரன்காம் ஏழாம்சபைக்கால தூதன் என விசுவாசிக்கிறோம், நாங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாஸ்டர்கள் என கூறிக்கொண்டு 100க்கு 99 பேர் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்ட ஓநாய்களாகவே இருக்கிறார்கள். இவர்களால் நாளுக்குநாள் மாறுபாடான புதுப்புது உபதேசங்கள் தோன்றுகின்றன. ஆனால் இந்த பாஸ்டர்களது குடும்பவாழ்க்கை சரியில்லை, ஊழியத்தில் நேர்மையில்லை, இவர்களது ஊழியத்தின் நோக்கங்கள் ஒரு சுகபோகமான வாழ்க்கையை மையமாகக்கொண்டு இருக்கிறது. எந்தவிதமான உழைப்பும் இன்றி வாழ்வதே இவர்களது வாழ்வின் இலட்சியம். இவர்களும் இக்காலத்திற்குரிய செய்தியை சார்ந்துக்கொண்டு, செய்திக்கு கீழ்படியாது, நாங்களும் செய்தியில் இல்லையோ நாங்களும் எடுத்துக்கொள்ளப்படுவதில் பங்குகொள்வது இல்லையோ என்கிறார்கள். ஆனால் லவோதிக்கேயா சபைக்காலம் குறித்து ஏழாம் சபைக்காலதூதன் : **லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டதா?** இல்லை. அது முடிந்து விட்டது என்று நான் ஒருபோதும் கூறினது இல்லை. அவ்விதம் நான் கூறியிருந்தால், அதை தவறாக கூறினேன். அல்லது நீங்கள் அதை தவறாக புரிந்துக்கொண்டிருப்பீர்கள். இதுகடைசி சபைக்காலம். இது சபைக்காலங்களின் முடிவு ஆகும். இந்த லவோதிக்கேயா, அது முடிவடையவில்லை. அது முடிவடைந்தால் சபை போய் விடும். சபை உள்ளவரைக்கும் அது முடியவில்லை. (கே.ப.391,பக்கம்.31, பத்தி.74, நாள்.30-08-1964) மேலும் புறஜாதிகளின் நிறைவு சபைக்காலங்களில் முடிவுப்பெறும். அப்படியானால் இந்த உபதேசத்தார் ஏன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இன்னும் பிரசங்கிக்கிறார்கள்? ஆத்தும ஆதாயங்கள் செய்கிறார்கள்? அப்படி செய்வதினால் பிரயோஜனம் ஒன்றும் இல்லையே? ஏனென்றால் அவர்களுடைய உபதேசத்தின்படி புறஜாதிகளின் முடிவு நிறைந்துவிட்டதே? எடுத்துக்கொள்ளப்படுதலும் நடந்துவிட்டதே? தேவனுடைய வார்த்தையில் இல்லாத, இக்காலத்திற்குரிய செய்தியில் இல்லாத ஒன்றை உங்களிடம் பிசாசு கொண்டுவரும்போது, தேவஞானம் உங்களிடத்தில் இருந்தால் மாத்திரமே அது சரி அல்லது தவறு என்பதை உங்களால் நிதானிக்கமுடியும். ஆனாலும் இவர்களுக்கு பின்னால் ஒரு கூட்டம் உண்டு. புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே பிள்ளைகள் அதிகம் என்று கலா.4:27, ஏசா.54:1 கூறுகிறது. ஆதலால் அநேகர் அவர்களை பின்பற்றுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏழுசபைக்காலம் முடிந்துவிட்டது என்றால், எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது என அர்த்தம். எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டால் தலைக்கல் வந்துவிட்டது எனபொருள்படும். இந்த உபதேசத்தில் சகோ.கே.ராஜா ஒருகாலத்தில் தீவிரமாக இருந்தார் என்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். இந்நாட்களில் ஒருமுறை அவர் என் இல்லத்திற்கு வந்திருந்தபோது இதுகுறித்து அவரிடம் பேசினேன். நான் தீர்க்கதரிசியின் செய்தியைக்கொண்டு தலைக்கல்லுக்கடுத்து கூறிய காரியங்களை அவர் ஏற்றுக்கொண்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் அவருடைய முந்தின நிலையை பார்க்கவில்லை. இன்று அவர் எப்படியிருக்கிறார் என்பதையே பார்க்கிறேன். இன்று அநேக காரியங்களில் அவர் திருந்தி வருகிறதை அவருடைய ஊழியத்தின் பாதையில் காண்கிறேன்.

25. **தலைக்கல் :** இது என்ன? கடைசியாக அன்பைக்கூட்டி வழங்குங்கள். அதுவே தேவ அன்பு என்னும் தலைக்கல்லாய் இருக்கிறது. (பத்தி.317) அந்த தலை கிறிஸ்துவாகயிருக்கிறார். (பத்தி.327) அந்த தலைக்கல்லானது என்றாவது ஒருநாள் வருகிறதாயிருக்கிறது. (பத்தி.327) செய்தி : ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி பக்கம்.80, நாள்.14-10-1962. அடுத்து நாம் விசுவாசம் என்பதுடன் வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகத்தையும் கூட்டிக்கொண்டே வந்து ஒரு தனிப்பட்ட நபரை உருவாக்கி, அவைகளை பொருத்தி பரிசுத்தஆவியினால் முத்தரிக்கிறார். (ஐயா, இதுதான் தேவனின் அடையாளமா? பக்கம்.117,பத்தி.373, நாள்.30-

12-1962) ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்னோ இவைகளை (மேற்கண்ட ஏழு திவ்விய தெய்வீக சுபாவங்களை) பெற்றிருப்பாரகளானால், தலைக்கல்லாகிய பரிசுத்தஆவி தாழ இறங்கிவந்து அவர்களை தேவனுடைய இராஜ்யத்தில் முத்தரிக்கிறது. (ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி, பக்கம்.91,பத்தி.360, நாள்.14-10-1962) எதனால் முத்தரிக்கப்படுகிறார்கள்? பரிசுத்த ஆவியினால். இப்பொழுது கவனியுங்கள் : கட்டிடம் அன்பு என்னும் தலைக்கல்லுக்காக காத்துக்கொண்டிருக்கிறது. (கே.ப.291, பத்தி.328, நாள்.23-08-1964) கவனியுங்கள் 23-08-1964 வரை சபை அன்பு என்னும் தலைக்கல்லுக்காக காத்துக்கொண்டிருக்கிறது என்பதே கடைசி சபைக்கால செய்தி. இப்பொழுது : அன்பு என்னும் தலைக்கல் பரிபூரணமான சபையின் மேல்தான் வந்து அமரும். (மேற்கண்ட செய்தியில் பத்தி.329) தலையும், சரீரமும் ஒன்றாய் இணையும்போது பரிசுத்தஆவியின் முழு வல்லமை அவளை உயிரோடே எழுப்பி, வானத்தின் வழியாக பறந்து செல்வார்கள். (கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்? பக்கம்.45, பத்தி.116, நாள்.24-11-1963) அப்பொழுது நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில். **தலைக்கல் எப்பொழுது வரும்?** அந்தக்கல்லானது வரும்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது செதுக்கப்பட்டு ...... கிறிஸ்துவைப்போல அது பரிபூரணமாக காட்சியளிக்க வேண்டும். அப்பொழுதுதான் எடுத்துக்கொள்ளப்படுதலும், நித்திய வீட்டுக்குச் செல்லுதலும் சம்பவிக்கும். (ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி, பக்கம்.94, பத்தி.371, நாள்.14-10-1962) ஆக எனக்கு பிரியமான சகோதர சகோதரிகளே தலைக்கல் வருகை என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படுதலாகும். உயிரோடுயிருக்கும் நாம் கர்த்தருக்கு எதிர்கொண்டுப்போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். (1தெச.4:17) இங்கு ஒரு முக்கியமான காரியத்தை கவனியுங்கள். இந்நாட்களில் திருச்சியில் உள்ள கள்ளகபடமுள்ள வேலையாட்கள், பேலியாள் மக்கள் கர்த்தர் வந்துவிட்டார், அவரது திருமணம் நடந்துவிட்டது, அவர் வந்துபோய் விட்டார் போன்ற தவறான உபதேசங்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள். கவனியுங்கள் : மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டு, மகிமையில் பிரவேசித்து கலியாணம் செய்தவளாய் பூமிக்கு திரும்பி வந்து, ஆயிரம் வருஷம் வாழ்கிறாள். (கே.ப.259, பத்தி.222, நாள்.23-08-1964) ஆயிரம் வருட அரசாட்சி வரைக்கும் மேசியா பூமிக்கு வரமாட்டார். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கு கர்த்தரை சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் எடுத்துக்கொள்கிறார். (கே.ப.123 பத்தி.448) முடிவாக லவோதிக்கேயா சபைக்காலம் இன்னும் முடியவில்லை. தலைக்கல் இன்னும் வரவும் இல்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படவும் இல்லை. ஆதலால் கள்ளகபடமுள்ள வேலையாட்கள், ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களின் விபரீதமான போதனைகளுக்கு செவிகொடுத்து உங்களது விசுவாசக்கப்பலை சேதப்படுத்திக்கொள்ளாதீர்கள்.

26. மணவாட்டி ஏழாம் முத்திரையில்தான் எடுத்துக்கொள்ளப்படுவாள், ஏழாம்முத்திரைச் சம்பவம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரியது என எனது அருமையான சகோதரன், சகலவற்றையும் அறிந்த பெங்களூரு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூடாரம் பாஸ்டர்.ஜான் அவர்கள் கூறுகிறார்கள். தனது எல்லாம் அறிந்தவன் என்ற ஆணவத்தில் தனது அறிவாற்றலை இழந்துவிட்டார் என தெரிகிறது. இது இவரது லௌகிக ஞானம். இவரை நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் தங்கள் ஆத்துமாவில் வஞ்சிக்கப்பட்டு மரணத்திற்கு வீரநடைப்போட்டு செல்கிறார்கள். (ஆதாரம் இவரது 2016 ஆம் ஆண்டு காலண்டர், செப்டம்பர் - அக்டோபர் மாதப்பகுதி) அப்படியானால் பரத்திற்குரிய ஞானம் என்ன? ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - ஏழாவது முத்திரை, பக்கம்.906, பத்தி.63 : இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 4ஆம் அதிகாரத்தில் சபை எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். நான்கு குதிரைகளின் மீது சவாரி செய்தவர்கள் கடந்து சென்ற பிறகு சபை எடுக்கப்படுகிறது. சபைக்கு நிகழவிருக்கும் யாவுமே வெளிப்படுத்தின விசேஷம். 4ஆம் அதிகாரம் வரை நிகழ்ந்து வருகின்றன. அடுத்து ஒரு எடுத்துக்காட்டு. ஏழுமுத்திரைகளின் வெளிப்பாடு - 5ஆம் முத்திரை, பக்கம்.611, பத்தி.218 : இப்பொழுது 5ஆம் முத்திரை உடைக்கப்பட்டபோது சபை ஏற்கெனவே எடுக்கப்பட்டு விட்டது என்பதை கவனியுங்கள். இதிலிருந்து கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதல் ஏழாம் முத்திரைக்கடுத்த சம்பவம் என்பது ஒரு மதிகேடான போதனை. மணவாட்டி சபைக்காலம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படுகிறாள். மேற்கூறியவரைப்போன்ற அநேக போலிகள் எழும்பி, விசுவாசிகளை திசைதிருப்பி வருகிறார்கள். முடிவில் இவர்களும் தங்கள் பந்தையப்பொருளை இழப்பதோடு, இவர்களை நம்பியவர்களையும் இழக்கச்செய்கிறார்கள். ஆக இவர்களை நம்பியுள்ளவர்களின் நிலை அந்தோ பரிதாபத்திற்குரியது. இவர்களில் எனக்கு அறிமுகமானவர்களும் பலர் உண்டு.

27. இப்பொழுது வெளி 4ஆம் அதி. முதல் வசனத்தை நாம் காணும்போது, இங்கு இருமுறை **இவைகளுக்குப்பின்பு** என்று கூறப்பட்டுள்ளது. அதாவது சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு என்று பொருள்படும். சபைக்காலங்களுக்கு பின்பு, இனி சம்பவிக்க வேண்டியவைகளை யோவான் காண அழைக்கப்படுகிறான். வெளி.2,3 அதிகள் ஏழுசபைக்காலங்களைப் பற்றி கூறுகிறது. யோவான் சபைக்காலங்களின் முடிவை பார்த்தப்பிறகு அதாவது சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, இனி சம்பவிக்க வேண்டியவைகளை பார்க்க இங்கே ஏறி வா என்று மேலே அழைக்கப்படுகிறான். சபைக்காலங்கள் முடிந்த உடனே யோவான் எடுத்துக்கொள்ளப்பட்டது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்தவுடனே சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன் அடையாளம். இங்கே ஏறி வா – எங்கே? அவர் தன் ஜனங்களை மீட்டுக்கொண்டார். பூமியில் அவரது கிரியைகள் முடிந்து விட்டன. அவர் இப்பொழுது தம்முடைய மணவாட்டியுடன் மகிமையில் / பரலோகத்தில். கீழ்கண்ட வசனங்களை தியானியுங்கள். லூக்.24:51,

ரோ.8:34, எபி.8:1, வெளி.4:2. அங்கிருந்து யோவானை இங்கே ஏறி வா என்று அழைக்கிறார். எதற்கு? சபைக்காலங்கள் முடிவடைந்தப்பிறகு, சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, இனி நடக்கவேண்டிய சம்பவங்களைக்காண. யோவான் எதிர்காலத்தில் நடக்கப்போகிறவைகளை காண்கையில், அவன் அந்த காலத்தில் ஜீவித்து, அவைகளை காண்பதுபோல் கண்டான். இதைக்காண அவன் ஆவிக்குள்ளாக வேண்டியதிருந்தது. யோவான் ஆவிக்குள்ளானப் பின்புதான், வானத்தில் ஒரு சிங்காசனம் இருப்பதையும், அதின்மேல் ஒருவர் வீற்றிருப்பதையும் கண்டான். இது தேவனும் ஆட்டுக்குட்டியும் இருக்கிற சிங்காசனம். (வெளி.22:1) Throne of God and of the Lamb. இவர் இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமான இயேசு கிறிஸ்து. (வெளி.1:4) இப்பொழுது கவனியுங்கள். அந்த சிங்காசனத்தின் மத்தியிலும், அந்த சிங்காசனத்தை சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருந்தன. இந்த நான்கு ஜீவன்கள் யார்? சிங்கம் - வல்லமை, காளை - உழைப்பு, மனுஷமுகம் - ஞானம், பறக்கும் முகம் - கழுகு. இவைகள் யாவும் சேராபீன்கள். அதாவது மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியவை அப்போஸ்தலருடைய நடபடிகளின் புஸ்தகத்தை சுற்றியிருக்கின்றன. இந்த நான்கு ஜீவன்களும் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தனர். இவ்வாறாக அந்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது அந்த சிங்காசனத்தை சூழயிருந்த 24 சிங்காசனங்களில் 24 மூப்பர்கள் அமர்ந்திருந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரை தொழுதுக்கொண்டு நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள். இதுக்குறித்து நீங்கள் வெளி.4ஆம் அதியில் தியானிக்கலாம். மேலும் இந்த சிங்காசனத்தில் வீற்றிருந்த சிருஷ்டிகரைக்குறித்து யோவான் : அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை என்கிறான். (யோ.1:10) He was in the World and the world was made by him and the world knew him not. இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். (1யோ.5:20 – The true God and Eternal life) இவரைத்தான் தீர்க்கதரிசியாகிய எரேமியா : கர்த்தரே மெய்யான தெய்வம். ஜீவனுள்ள தேவன், நித்தியராஜா என்கிறான். (எரே.10:10) The LORD is the true God, He is the living God, and an everlasting king.

28. ஆக, கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து யார் என்பதை ஒருவன் அறியவேண்டுமானால், அவன் முதலாவதாக ஆவிக்குள்ளாக வேண்டும். திரித்துவ ஸ்தாபன சபை மக்களிடம் பரிசுத்த ஆவி இல்லாததால், அவர்களால் ஆவிக்குள்ளாக முடியவில்லை. அவர்கள் பாரம்பரிய, பேர் கிறிஸ்துவர்களாக மாத்திரமே இருக்கிறார்கள். ஆதலால் தான் இவர்கள் அந்த ஒரு சிங்காசனத்தில் ஒருவருக்கு பதிலாக மூவரை காண்கிறார்கள். இவர்கள் பார்வை அடையும் படிக்கு தங்கள் கண்களுக்கு கலிக்கம் போட வேண்டும் என்று ஆவியானவர் ஆலோசனை கூறுகிறார். (வெளி. 3:18) இவர்கள், இந்த மூவருக்கும் கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பங்கிட்டு கொடுக்கிறார்கள். ஆதலால் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்புகூற முடியவில்லை. கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனையை கடைபிடிக்கவே முடியவில்லை. இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும், ஆரோக்கியமாகாமலும் இருக்கும் படிக்கு, இவர்களின் இருதயம் கொழுத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு சொல்லியிருக்கிறார். (அப்.28:27) வானத்தில் காணப்பட்ட அந்த ஒரு சிங்காசனத்தில் பிதாவாக ஒரு தனிப்பட்ட நபரையும், குமாரனாக ஒரு தனிப்பட்ட நபரையும், பரிசுத்த ஆவியாக ஒரு தனிப்பட்ட நபரையும் காண்கிறார்கள், அவரை திரித்துவ தேவன் என்கிறார்கள். Three persons in one God என்கிறார்கள். இவர்கள் இலக்கணத்தை அறியாதவர்கள். 1+1+1=3. இதுதான் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட இலக்கணம். ஆனால் 1+1+1=1 என்பது அறிவீனம். தாங்கள் பிடித்த முயலுக்கு 3 கால் என சாதிக்கும் கூட்டம்.

29. இப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவருடைய வலதுகரத்தில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட ஒரு புஸ்தகத்தை யோவான் காண்கிறான். (வெளி.5:1) A Scroll written within and at back, Sealed with seven seals. இது நமது கரங்களில் உள்ள வேதாக புஸ்தகம் போல் அல்ல. மாறாக இது சுருள் புஸ்தகம். காபிரியேல், மிகாவேல் போன்ற தேவதூதர்களோ, எலியா மோசே போன்ற தீர்க்கதரிசிகளோ, பவுல் பேதுரு போன்ற அப்போஸ்தலர்களோ, யோபு போன்ற பரிசுத்தவான்களோ, வானத்திலாவது பூமியிலாவது, பூமியின் கீழிருந்தாவது ஒருவனாலும் அந்த புஸ்தகத்தை பார்க்க, வாங்க, திறக்க, வாசிக்க கூடாதிருந்தது. உங்களுடைய போப்பாண்டவர், பிஷப், அத்தியட்சர், தலைமை போதகர், சபைஸ்தாபன தலைவர்கள் போன்ற அனைவரும் தங்கள் முகத்தை மறைத்துக்கொண்டார்கள். அவர்களால் தலைநிமிர்ந்துகூட பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு பாவங்கள் அவர்களிடத்தில் காணப்பட்டது. ஏழாம் சபைக்கால தூதன் செய்தி வரும்வரை அந்த மீட்பின் புஸ்தகத்தின் இரகசியங்கள், அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை. முன்னிருந்த 6 சபைக்காலங்களிலும் இந்த புஸ்தகம் ஆராயப்பட்டது. ஆனால் அதை யாரும் முற்றிலுமாக புரிந்துக்கொள்ள முடியவில்லை. இப்பொழுது இந்த புஸ்தகத்தில் மீட்பின் உரிமை பத்திரம் உள்ளது. அது ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டுள்ளது. ஏழு முத்திரைகள் மீட்பின் புஸ்தகத்தில் உள்ள

இரகசியங்களை வைத்திருக்கின்றன. மீட்பின் புஸ்தகம் இங்கே உள்ளது. மீட்பின் திட்டமும் இங்கே உள்ளது. நாம் மீட்கப்படுவதற்குரிய ஒரே வழியும் இங்கே உள்ளது. பரலோகங்களும், பூலோகமும் மீட்கப்படுவதற்குரிய உரிமை புஸ்தகம் இங்கே உள்ளது. ஆனால் அந்த புஸ்தகத்தை பெற முத்திரைகளை உடைக்க, அதை திறக்க யாரும் பாத்திரவானாக இல்லை. இழக்கப்பட்ட உரிமைகளை மீட்பதற்குரிய கிரயத்தை செலுத்த யாருக்குமே தகுதியில்லை. ஆதலால் யோவான் மிகவும் அழுதான். ஏனென்றால் மீட்கும் தகுதியை சந்திக்க ஒருவரும் இல்லை என்றால் முழு உலகமும், சிருஷ்டிப்பும், மானிடவர்க்கமும் அனைத்துமே அழிந்து போகும். ஏனென்றால் அனைத்தும் விழுந்து போன நிலையில் உள்ளது. முடிவில் ஒருவர் மாத்திரமே அதற்கு பாத்திரமாக இருந்தார். அவர் யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் மாத்திரமே. அந்த புஸ்தகத்தை வாங்கவும், அதில் உள்ள ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயம் கொண்டிருந்தார். அல்லேலுயா தேவனுக்கு ஸ்தோத்திரம்.

30. அடுத்து என்ன நடக்கிறது? யோவான், இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும் 24 மூப்பர்களுக்கும் மத்தியில் வந்த நிற்க காண்கிறான். இந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை **எடுக்கிறார்**. இங்கு **வாங்கினார்** என்ற தமிழ் மொழிபெயர்ப்பு சரியல்ல. இது ஆங்கிலத்தில் Took என உள்ளது. இங்கு வெளி.5:6ல் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி என்று எழுதப்பட்டிருப்பதால் இந்த பேலியாளின் மக்களாகிய கிறிஸ்து பிரன்காம் கூட்டத்தார் இதிலிருந்து ஒரு போதனையைக்கொண்டு ஏழாம் சபைக்கால தூதனை அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி என சித்தரித்து, ஏழாம் சபைக்கால தூதனை கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என அழைக்கிறார்கள். இவர்களை அப்.பவுல் சபிக்கப்பட்டவர்கள் என்று அழைக்கிறான். ஏனென்றால் இது வேறொரு சுவிசேஷம். இவர்கள் ஆட்டுக்குட்டி - இயேசு கிறிஸ்து, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி சகோ. பிரன்காம் என மாறுபாடான ஒரு சுவிசேஷத்தைக்கொண்டு வந்து மக்களை வஞ்சிக்கிறார்கள். கவனியுங்கள். இயேசு உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. (வெளி.13:8) Lamb slain from the foundation of the world. இயேசு உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்டவர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து இரட்சிக்கப்பட்ட யாவரும் ஆட்டுக்குட்டி உலகத்தோற்றம் முதல் தேவனுடைய சிந்தையில் அடிக்கப்பட்டபோது இரட்சிக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவின் மணவாட்டி, உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டவர்கள். இவர்கள் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறார்கள். (1பேது.1:19) சகோ. பிரன்காம் ஒரு ஆண் பெண் மாம்ச இச்சையினால் பிறந்தவர். அவருடைய இரத்தத்தில் பாவம் உண்டு. அந்த பாவக்கறைப்பட்ட இரத்தத்தினால் நாம் மீட்கப்பட முடியாது. ஆக உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட இயேசுவின், உண்மையான சம்பவம் சுமார் 4000 ஆண்டுகளுக்குப்பின்பு கல்வாரி சிலுவையில் நிறைவேறியது. இயேசு கிறிஸ்து உண்மையாகவே கல்வாரி சிலுவையில் அடிக்கப்படும்முன், யோவான் ஆவிக்குள்ளாகி அந்த சம்பவத்தை தரிசனத்தில் கண்டான். அவன் தரிசனத்தைக் கண்டபோது அவர் அடிக்கப்படவில்லை. ஆதலால் தான் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி என்கிறான். Lamb as though it had been slain. (Hebrews, Page.317, Para.204, 205-யை தியானிக்கவும்). ஆக இந்த ஆட்டுக்குட்டி கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாகிய இயேசுகிறிஸ்து. இவர் உலகத்தின் பாவங்களை சுமர்ந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (வெளி1:14, யோ.1:29) ஆக இந்த ஸ்தானத்தில் சகோ.பிரன்காமை வைத்து அழகு பார்ப்பவர்கள் உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்பத்தின் வாரிசுகளே.

31. வெளி 5:1 தமிழில் கீழ்கண்டவாறு மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன். இது ஆங்கிலத்தில் AND I saw in the right hand of him that sat on the throne a book written within and on the backside, sealed with seven seals. இதுக்குறித்து சகோ.பிரன்காம் தனது செய்தி Sirs, is this the time? Page 37, Para 3, நாள் 30.12.1962ல் கீழ்கண்டவாறு கூறுகிறார். Notice, Revelation 5:1. Listen at this now. And I saw in the right hand of him that sat on the throne a book written within (the writing was inside) and on the backside, sealed with Seven Seals. Now there is writing on the inside of the book, but the backside had seven seals on the back of it that was not written in the book. Now, this the revelation talking – John. Now remember, it was not written in the book, and in the days of the voice of the Seventh Angel all this mystery that is written within should be finished. It should be taken care of in that day.

32. இதை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மறைந்த டாக்டர். எஸ்.சி. ஜக்கப் அவர்கள் கீழ்கண்டவாறு மொழிப்பெயர்த்துள்ளார்கள். வெளிப்படுத்தல் 5:1 யை கவனியுங்கள். அன்றியும், உள்ளும் (உள்ளே எழுதப்பட்டிருந்தது) புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்திலே கண்டேன். (ஆங்கில வேதாகமத்தில் உள்ளில் மாத்திரம் எழுதப்பட்டு, புறம்பே ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தது என்னும் அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது – மொழிப்பெயர்ப்பாளர்). புஸ்தகத்தின் உள்ளே எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதன்

பின்பாகத்தில் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தன. யோவான் இவ்வாறு கூறுகிறான். புறம்பே ஒன்றும் எழுதப்படவில்லை என்பதை கவனிக்கவும். ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களில், உள்ளே எழுதப்பட்டவைகளின் இரகசியம் நிறைவேறும். அந்தநாளில் அது பார்த்துக்கொள்ளப்படும். (ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 58, பத்தி 1,2 நாள் 30.12.1962) இதை VOGR சென்னையின் மொழிப்பெயர்ப்பு ஆமோதிக்கிறதாகவே இருக்கிறது. இவர்களது மொழிப்பெயர்ப்பு : ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா? பக்கம் 94,95 பத்திகள் 302,303.

33. இதற்கடுத்த காரியங்களை நான் உங்களுக்கு விளக்கும்போது, நான் சகோ. பிரன்காமுக்கு எதிராக எழுதுகிறேன், அவரால் கொடுக்கப்பட்ட செய்தியை மறுதலிக்கிறேன், அவரது செய்தியை திசைதிருப்புகிறேன் என்று நீங்கள் என்னை தவறான சிந்தையோடு பார்க்கக்கூடாது. உண்மையான அன்பு பிழையை திருத்தமுயலும். ஆதலால் உங்கள் பிழைகள் / தவறுகள் திருத்தப்படும்போது நீங்கள் அதை நல்லமுறையில் ஏற்றுக்கொள்ளவேண்டும். சகோ.பிரன்காம் தேவனுடைய வார்த்தையை பிரசிங்கிப்பதால், அவருடைய பிரசங்கத்தை தேவனுடைய வார்த்தையைக் கொண்டே சீர்தூக்கி பார்ப்பது தேவனுடைய முறையாகும். நான் எழுதுவது குறித்து சற்று ஆழமாக நிதானத்துடன் சிந்தியுங்கள். பின் ஒரு முடிவுக்கு வாருங்கள். நானும் கர்த்தரால் அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டு, கடந்த 1978 முதல் இந்த பணியில் உள்ளேன். ஒரு தனிப்பட்ட மனிதனாக, தேவ ஒத்தாசையோடு, ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி மனிதர் முகம் பார்க்காது, தேவன் என் உள்ளத்தில் வைத்ததை அப்படியே போதிக்கிறேன். எழுதுகிறேன். இதனால் அநேகருக்கு வேண்டாதவனாகவும் ஆகிவிட்டேன். அதுக்குறித்து நான் என்றும் கவலைப்பட்டதில்லை. சத்தியத்தை எழுதுவதால், உபதேசிப்பதால் பலருக்கு சத்துரு ஆனேன். இதனால் தேவனுடைய வார்த்தை நிறைவேறுகிறது. ஆதலால் அதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் சகோ. பிரன்காமின் ஊழியத்தை உலகம் முழுவதும் கொண்டு சென்றார். ஆனால் என் ஊழியத்தை தமிழ்நாட்டுக்குள்ளே வைத்திருக்கிறார். ஒரு காலகட்டத்தில் அநேக வெளிநாடு ஊழியக்காரர்களுக்கும், இந்தியாவில் இதர மாநிலங்களில் உள்ள அநேக ஊழியக்காரர்களுக்கும் அறிமுகமானவனாக இருந்தேன். ஆனால் இப்பொழுது அனைவராலும் மறக்கப்பட்டேன். காரணம் : தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. (2தீமோ.2:9) நான் யாராலும் கட்டப்பட்டிருக்க விரும்பவில்லை. சுயாதீனனாகவே செயல்பட விரும்புகிறேன். வெளிநாடு உறவு : அது பணத்திற்கு அடிமை என்பதை நான் கண்டுக்கொண்டேன்.

34. உங்கள் ஊரில் மூலைமுடுக்குகளில் கிறிஸ்துவின் பெயரில் சபைகள், பாஸ்டர்களின் எண்ணிக்கைக்கு குறைவு இல்லை. ஆனால் எந்த மேய்ப்பனுடைய ஊழிய அழைப்பானது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்கிறதா என்பது ஒரு கேள்விக்குறியே? யார் என்னுடைய அழைப்பு தேவனுடையது, வேதவாக்கியங்களின் அடிப்படையில் என் ஊழியம் அமைந்துள்ளது என்று கூறமுடியும்? எங்கும், எதிலும் கள்ளகபடமுள்ள வேலையாட்களே, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே, மக்களை ஏமாற்றி சோம்பேறிதனத்தில் வாழ்ந்து தங்கள் வயிற்றுப்பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தீர்க்கதரிசியின் செய்தி, கடைசி சபைக்கால செய்தி என முழக்கமிடும் ஊழியக்காரர்களை குறித்துத்தான் இதை எழுதுகிறேன். எலியா தான்மாத்திரம் தான் உண்டு என நினைத்தான். அப்பொழுது கர்த்தர் அவனிடம் நான் ஏழாயிரம் பேரை வைத்திருக்கிறேன் என்றார். ஆதலால் உண்மையானவர்கள் இல்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால் பெரும்பான்மையானோர் போலிகளே. மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். இதுக்குறித்து என்மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவர்கள் யார்? நான் அறிய ஒருகாலத்தில் விசுவாசிகளிடமிருந்து பாஸ்டர்கள் ஆயிரக்கணக்கில் பணத்தை அபகரித்து, உங்களுக்கு இதை குறுகிய காலத்தில் பலமடங்கில் திரும்பித் தருகிறோம் என ஒரு பெங்களூரு பாஸ்டரும், உங்கள் முதலீட்டுக்கு ஒரு நல்ல வீட்டைக்கட்டித் தருகிறோம் என கோவை பாஸ்டரும் விசுவாசிகளை வசீகரித்து ஏமாற்றினார்கள். ஆனாலும் அவர்கள் இன்றும் ஊழியத்தில் காலூன்றி நிற்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் யார்? விசுவாசிகளிடம் சிந்திக்கும் திறன் இல்லை. வெறும் மண்டுகளாகவே இருக்கிறார்கள். முடிவில் தேவனுக்கு கொடுத்தோம் என்கிறார்கள். அந்த அளவுக்கு பாஸ்டர்கள் அவர்களின் மனதை தங்கள் சாதூரிய பேச்சினால் மயக்கிவிடுகிறார்கள். எவனோ ஒருவனுக்கு தங்கள் பொருளாசையின் நிமித்தம் தங்களுடைய பணத்தைக் கொடுத்து, வஞ்சிக்கப்பட்டதினால் தேவனுக்கு கொடுத்தோம் என மாய்மாலம் பண்ணுகிறார்கள். இவர்கள் மாயையை தேவன் நன்கு அறிவார் என்பதை மறந்துவிடுகிறார்கள். முடிவில் ஊழியக்காரனும் விசுவாசிகளும் தேவனை ஏமாற்றுகிறார்கள்.

35. இப்பொழுது கவனியுங்கள். தமிழ் மொழிப்பெயர்ப்பில் டாக்டர். எஸ்.சி.ஜக்கப் அவர்கள் ஆங்கில வேதாகமத்தில், உள்ளில் மாத்திரம் எழுதப்பட்டு புறம்பே ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தது என்னும் அர்த்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்கிறார்கள். இதை VOGR சென்னை ஆமோதிக்கிறதாக இருக்கிறது. டாக்டர். எஸ்.சி.ஜக்கப் Ph.D. பட்டம் பெற்ற ஒரு அறிஞர். அவரது மொழிப்பெயர்ப்புக்கு முன்பு ஆங்கிலத்தில் வெளி 5:1-யை தியானித்தாரா? அல்லது VOGR சென்னைதான் அதுகுறித்து சிந்தித்தார்களா? ஆங்கிலத்தில் இது எவ்வாறு உள்ளது? Written within and on the backside, sealed with Seven Seals என்றுதானே உள்ளது. டாக்டர்.எஸ்.சி.ஜக்கப் பிரகாரம் Written within, and on the backside sealed with Seven Seals என இல்லையே. ஆங்கில வார்த்தையின்படி தமிழ் வேதாகம மொழிப்பெயப்பு உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகம் என்பதுதானே சரியான மொழிப்பெயப்பு. இதை டாக்டர்.எஸ்.சி.ஜக்கப் மற்றும் VOGR சென்னை எப்படி

தவறு என்று கூறமுடிந்தது? இடம்மாற்றிப் போடப்பட்ட ஒரு கமா(,) எவ்வளவு பெரிய வித்தியாசத்தை கொண்டு வந்துவிட்டது என்பதை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா? Written within and on the backside, கமா இங்குதான் உள்ளது. ஆனால் இவர்கள் இருவருடைய மொழிபெயர்ப்பு மற்றும் சகோ.பிரன்காமுடைய செய்தி Written within, and on the backside sealed with Seven Seals என உள்ளது. இது முற்றிலும் தவறு. இப்பொழுது சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவருடைய வலதுகரத்தில் உள்ள புஸ்தகம் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தது என்பதே நூறு சதவீதம் சரி. ஆக மிக்கமனபாரத்துடன் எழுதுகிறேன். சகோ. பிரன்காம் புஸ்தகத்தின் உள்ளில் மாத்திரமே எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதன்பின் பாகத்தில் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தன, மேலும் புஸ்தகத்தின் புறம்பே ஒன்றும் எழுதப்படவில்லை என்பது அவருடைய தவறான கருத்து, எண்ணம், புரிந்துக்கொள்ளுதல் ஆகும். ஆனால் அது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. உள்ளும் புறம்பும் எழுதப்பட்டது என்பதே சரி.

36. அடுத்து சகோ.பிரன்காம் கூறியபடி : அந்த இடிமுழக்கங்கள் கூறினவை புஸ்தகத்தின் வெளிப்புறத்தில் உள்ளன. அதை எழுதக்கூடாது என்று யோவானுக்கு கட்டளையிடப்பட்டது. (ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம்.58, பத்தி.3) இதுவும் ஒரு தவறான கருத்து. யோவான் இடிமுழக்கங்கள் முழங்கினதை கேட்டான். கவனியுங்கள் யோவான் இடிமுழக்கங்களின் சத்தத்தை கேட்டான். ஆனால் அதுகுறித்து எழுதக்கூடாது என்று கட்டளை பெற்றான். ஆனால் அது சகோ.பிரன்காம் செய்தியின்படி, அந்த இடிமுழக்கங்கள் வெளி 5:1 புஸ்தகத்தின் வெளிபுறத்தில் உள்ளன / இருந்தன என்பதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. யோவானும் அவ்வாறாக கூறவில்லை. சகோ.பிரன்காம் வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டவும் குறைக்கவும் கூடாது. ஆக சகோ.பிரன்காம் ஐயன்மீர், இதுவா சமயம்? டாக்டர்.எஸ்.சி.ஜக்கப் பழைய பதிப்பு, பக்கம்.47, பத்தி.2, VOGR பக்கம்.97 கடைசி பக்கத்தின் தொடர் பத்தியில் கூறுவதை கவனியுங்கள். நாம் பேசப்போகும் ஏழு முத்திரைகள் எழுதப்பட்ட ஏழு முத்திரைகளாகும். இந்த ஏழு முத்திரைகளும் ஏழுசபைக்காலங்களின் ஏழு தூதர்களை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அந்த புஸ்தகத்தின் பின்பக்கத்தில், வேதாகமத்தின் வெளிப்படுத்துதல் - வேறு ஏழு முத்திரைகள் இருக்கின்றன என்கிறார். ஆனால் தேவனுடைய வார்த்தையோ வெளி 5:1 ல் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்டது என்றே கூறுகிறது. உள்ளே எழுதப்பட்டவைகளை முத்தரித்து ஏழு முத்திரைகள், பின்பாகத்தில் ஏழுமுத்திரைகள் என கூறப்படவில்லை. இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. ஆக இங்கே சகோ.பிரன்காம் தன் சொந்த கருத்தை கூறுகிறார். ஆதலால் அது மணவாட்டியால் ஆராய்ந்து பார்க்கவேண்டிய ஒன்றாகயிருக்கிறது.

37. இதன்பின்பு வெளிப்படுத்தல் 10-ல் கூறப்பட்டுள்ள ஏழுசத்தங்கள் வெளிப்படவேண்டிய சமயம் வரும். அந்த புஸ்தகத்தில் எழுதியுள்ள இரகசியங்கள் வெளிப்பட்டு முடிந்தவுடன், ஒன்றே ஒன்று மீதியாயிருக்கும். அதுதான் ஏழு இடிமுழக்கங்கள் முழங்கின சத்தம். அந்த இடிமுழக்கங்கள் கூறினவை புஸ்தகத்தின் வெளிப்புறத்தில் உள்ளன. அதை எழுதக்கூடாது என்று யோவானுக்கு கட்டளையிடப்பட்டது. (ஐயன்மீர், இதுவா சமயம்? பத்தி.3) திரும்பத்திரும்ப நான் கூறுகிறேன். இதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. இது சகோ.பிரன்காமின் சொந்தக்கருத்து, மேலும் தவறான கருத்து. வெளி 5:1-ல் புஸ்தகம் ஏழு இடிமுழக்கங்களை வெளியே கொண்ட புஸ்தகம் அல்ல. அது உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புஸ்தகம் மாத்திரமே.

38. ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரைப்போடு என்று வானத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாக கேட்டேன். அது பின்பாகத்தில் உள்ளது. முன்பாகத்தில் உள்ளதாக அவர் கூறவில்லை. பின்பாகத்தில் உள்ளதாக அவர் கூறினார். (இது வேதவாக்கியங்களில் இல்லை. கா.யோ.) இவைகள் கடந்து முடிந்தபின்பு ஏழு இடி முழக்கங்கள் கூறினவை மாத்திரமே அந்த புஸ்தகத்தில் ஒட்டப்பட்டு அவை வெளிப்படாமல் இருந்தன. அவை அந்த புஸ்தகத்தில் எழுதப்படவே இல்லை. (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.59, பத்தி.2) கவனியுங்கள் ஏழு இடிகள் வெளி 5.1 புஸ்தகத்தில் ஒட்டப்பட்டுள்ளது. அது அந்த புஸ்தகத்தில் எழுதப்படவில்லை என சகோ.பிரன்காம் பிரசங்கித்ததற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் எங்கே? இங்கு ஒன்றை கவனியுங்கள். ஏழுமுத்திரைகளில் வெளிப்பட்ட அனைத்தும் மத்தேயு.24 ஆம் அதிகாரத்தில் மறைந்துள்ளன. அது அங்கு மறைக்கப்பட்டிருந்ததை நாம் அறியாதவர்களாக இருந்தோம். காலம் நிறைவேறினபோது அது வெளிப்பட்டது. ஆக எதுவுமே வெளி 5:1 புஸ்தகத்தில் எழுதப்படாதது அல்ல, ஒருவேளை அந்தகாரியம் எங்கோ ஓர் இடத்தில் நம் கண்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம். இதுதான் உண்மை மற்றும் சரியானது.

39. இதைகாணத் தவறவேண்டாம். இந்த முத்திரைகள் புஸ்தகத்தில் இருக்கின்றன. ஏழாம் தூதன் எக்காளம் முழங்கும்போது, புஸ்தகத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ள இரகசியங்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டு நிறைவடைகின்றன. உள்ளே எழுதப்பட்டுள்ள திறக்கப்பட்ட புஸ்தகம் மூடப்படும். தேவஇரகசியம் முடிவடைந்தது. (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.59, கடைசி பத்தி) இன்னும் ஒன்றே ஒன்றுதான் வெளிப்படாமல் விடப்பட்டுள்ளது. அதுதான் நாம் இதுவரை அறிந்துக்கொள்ளாத இடிமுழக்கங்களின் இரகசியமாகும். (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.62, பத்தி.2) இப்பொழுது வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி அந்த முத்திரை, புஸ்தகத்திற்கு பின்பாகத்தில் போடப்பட்டுள்ளது. அந்த இரகசியங்கள் வெளிப்படவேண்டும். (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.62, பத்தி.3) முதலாம் முத்திரை திறக்கப்பட்டபோது, ஒன்றே ஒன்று - எல்லாவற்றையும் குலுக்கும்

அளவுக்கு இடிமுழக்கம் உண்டானதென்று செய்தி உரைக்கிறது. இங்கு நீங்கள் சற்று சிந்தித்தால் யோவான் வெளி 6:1ல் ஏழு இடிமுழக்கம் போன்ற ஒரு சத்தத்தைக் கேட்டான். As it were, the noise of the thunder. கவனியுங்கள். இது இடிமுழக்கத்தின் சத்தம் அல்ல. இடிமுழக்கத்தின் சத்தத்தைப்போன்ற ஒரு சத்தம். செய்தி : மேலும் புஸ்தகத்தின் உள்ளிருந்த முத்திரைகளில் முதலாம் முத்திரை ஒரு இடிமுழக்கத்துடன் திறக்கப்ப்ட்டது. (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.68, கடைசிபத்தி) வெளி 6:1-ல் முதலாம் முத்திரை இங்கு ஒரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது என கூறப்படவில்லை. இங்கு நாம் சற்று சிந்திக்க வேண்டிய ஒரு காரியம் உண்டு. எவ்வாறு நாம் வெளி 5:6-ல் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை கண்டோமோ அதேபோன்றுதான் வெளி 6:1-ல் இடிமுழக்கம் போன்ற சத்தம், ஆனால் அது இடிமுழக்கம் அல்ல. வெளி 6:1 யை சகோ.பிரன்காம் மேலே குறிப்பிடுகிறார். ஆனால் 2 முதல் 7 முத்திரைகள் திறக்கப்பட்டபோது இந்த இடி முழக்கம் போன்ற சத்தம் உண்டானதாக இல்லை. அப்படியிருக்க பின்பக்கத்தில் உள்ள முத்திரைகள் திறக்கப்படும்போது இடிமுழக்கங்கள் உண்டாக வேண்டும் அல்லவா? எனக்கு தெரியாது, என்னால் கூறமுடியாது என்றார். (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம்.67, தொடர்பத்தி, 69-ன் கடைசிப்பத்தி). இது VOGR மொழிப்பெயர்ப்பில் பக்கம்.109, பத்தி.348. இங்கு சகோ.பிரன்காம் முன்புறம் உள்ளே ஏழு முத்திரைகளில் முதலாம் முத்திரை திறக்கப்பட்டபோது ஒரு இடிமுழக்கம் முழங்கினதுபோன்று, பின்புறம் உள்ள முத்திரைகள் திறக்கப்படும்போது ஏழு இடிமுழக்கம் முழங்க வேண்டும் என எண்ணுகிறார். முன் உள்புறத்தில் ஏழுமுத்திரைகள், பின் வெளிப்புறத்திலும் ஏழு இடிமுழக்கங்கள் என்பதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. எந்தவொரு வெளிப்பாடும் வேதவாக்கியங்களுக்கு புறம்பாக இருக்க முடியாது. ஏனென்றால் வேதவாக்கியங்களோடு நாம் ஒன்றை கூட்டவும், குறைக்கவும் முடியாது. ஆதலால் இவை அனைத்தும் சகோ.பிரன்காமின் சொந்த கருத்தாகவே அமைந்துள்ளது. யோவான் அதை (ஏழு இடிமுழக்கங்களின் சத்தத்தை) எழுதவேண்டும் என்றிருந்தான். அப்போது வானத்திலிருந்து ஒரு சத்தம் கீழே வந்தது. அதை எழுதாதே. ஆனால் அதை முத்திரையிடு. அதற்கு முத்திரைப்போடு. புஸ்தகத்தின் பின்புறத்தில் அதை வைத்துவிடு என்று கூறினது. (VOGR ஐயன்மீர் இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி.319) ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை ஏழுதாமல் முத்திரைப்போடு என்றுதான் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. வெளி.10:4 இங்கு சகோ. பிரன்காம் கூறியபடி அந்த சத்தம் வானத்திலிருந்து கீழே வந்திருக்க முடியாது. ஏனென்றால் அப்பொழுது யோவான் தன் தரிசனத்தில் பரலோகத்தில்தான் இருக்கிறான். பரலோகத்திலிருந்த அவனுக்குத்தான் இந்த கட்டளை வந்தது. இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து வந்தது. (சங்.81:7) வானத்தில் காணப்பட்ட சிங்காசனத்திலிருந்து அந்த இடிமுழக்கங்கள் வந்தன. (வெளி 4:5) இந்த சத்தம் குறித்து மேலும் யோ 12:28,29, யோபு 40:9-ல் தியானியுங்கள்.

40. ஏழாம் முத்திரை திறக்கப்படும்போது, அதில் 3 வித இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. அதுதான் ஏழு இடிமுழக்கங்களின் இரகசியமாகும். பரலோகத்தில் உள்ள ஏழு இடிகள் இந்த இரகசியங்களை வெளியரங்கமாக்கும். அது கிறிஸ்துவின் வருகையின்போது வெளிப்படும். அவர் வரும் சமயத்தில் ஏழு இடிமுழக்கங்களின் சத்தம் முழங்கி அந்த மகத்தான காரியத்தை வெளிப்படுத்தும். அந்த நேரம் வரும்வரை அது வெளிப்படாது. (ஐயன்மீர் இதுவா சமயம் பக்கம்.514, பத்தி.2-4) ஆனால் ஏழுசபைகளின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவுவில் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகம், வெளிபடுத்தின விசேஷம் 10 அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும் எனக்கூறுகிறார். (பக்கம்.75, பத்தி.1 டாக்டர். எஸ்.சி.ஜக்கப்பின் மொழிப்பெயர்ப்பு - ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு) இப்பொழுது மல்கியா 4-ம் அதிகாரத்திலும் வெளி.10:6-லும் உரைக்கப்பட்ட இந்த செய்தியாளன் இரண்டு காரியங்களை செய்வார். முதலாவதாக, மல்கியா 4 உரைத்தப்படி, அவர் பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி 10ல் உள்ள ஏழு முத்திரைகளில் இருக்கின்ற அந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்களை வெளிப்படுத்துவார். இந்த தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட இரகசிய சத்தியங்கள் தான் பிள்ளைகளுடைய இருதயங்களை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பும். முற்றிலுமாக சரி. (ஏழுசபைக்காலங்களின் வியாக்கியானம், லவோதிக்கியா சபையின்காலம், பக்கம்.463, பத்தி.1) மேலும் 30.08.1964-ல் பிரசங்கித்த கே.ப. 395-ல் கேள்வி : ஏழு இரகசியங்களையுடைய ஏழு இடிமுழக்கங்கள் ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டுவிட்டதா? அவைகள் ஏழு முத்திரைகளில் வெளிப்பட்டு, நமக்கு இன்னும் ஆனால் ஏழு இடிமுழக்கங்கள் என்பதாக வெளிப்படவில்லையா? இல்லை. அவை ஏழுமுத்திரைகளில் வெளிப்படுத்தப்பட்டுவிட்டன. ஏழு இடிமுழக்கங்கள் என்பவை அவ்வளவுதான். நித்தியத்திலிருந்து வந்த ஏழு தூதர்களின் கூட்டம் (ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி.389) ஏழு இடிமுழக்கங்களை அந்த ஏழு தூதர்கள் தங்கள் கைகளில் பிடித்திருந்தார்கள். அவர்கள் அந்த ஏழுஇடிமுழக்கங்கள் சொன்னதை வெளிப்படுத்தி தருவார்கள். (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு. டாக்டர்.எஸ்.சி.ஜக்கப் மொழிபெயர்ப்பு, 19வது பக்கம் தொடர்பத்தி). பிரியமானவர்களே இங்கு சகோ.பிரன்காம் ஏழாவது முத்திரைக்கு அடுத்தது ஏழு இடிமுழக்கங்கள் என கூறவில்லை. ஆனால் முந்திய பத்தியில் ஏழாம் முத்திரை திறக்கப்படும்போது அதில் 3 வித இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன, அதுதான் ஏழு இடிமுழக்கங்களின் இரகசியம் என்கிறார். இவ்வாறாக ஏழு இடிமுழக்கங்கள் குறித்து அவரால் திட்டவட்டமாக இதுதான் அது என்று கூறமுடியவில்லை. அவரே அதில் குழப்பத்தில் உள்ளார் என தெரிகிறது.

41. இவ்வாறாக சகோ.பிரன்காம் ஏழாவது முத்திரை, ஏழு இடிமுழக்கங்கள் குறித்து ஒரு சரியான வெளிப்பாட்டை கொடுக்கமுடியவில்லை. வெளி.5:1 புஸ்தகத்தில் உள்ளே எழுதப்பட்ட ஏழு முத்திரைகள், பின் எழுதப்படாத ஏழு இடிமுழக்கங்கள் போன்ற செய்தியை ஜீரணிக்கமுடியவில்லை. இது வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாக காணப்படுகிறது. நாம் எல்லாரும் மானிடர்களே. நாம் ஒன்றை தவறாக புரிந்துக்கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறாகவே தவறாக வியாக்கியானம் பண்ணவும் வாய்ப்பு உண்டு. வெளிப்பாடு எதுவும் வேதப்பூர்வமாக அமைந்திருத்தல் அவசியம். நமது சிந்தனையில் எழும்பும் கருத்துக்கள் தவறாக இருக்க வாய்ப்பு உண்டு. சகோ. பிரன்காம் தன்னுடைய செய்திகளை வேதவாக்கியங்களோடு ஒத்துப்பார்க்கும்படிதான் கூறுகிறார். அவரும் தன்னுடைய உபதேசத்தில் தான் எல்லாவற்றிலும் சரி என்ற மேட்டிமை உடையவராகயில்லை.

42. முடிவில் சகோ. பிரன்காம் கூறுவதை கவனியுங்கள். இங்குதான் கர்த்தர் அவரது தவறான கருத்துக்களை உணர்த்துகிறார் / திருத்துகிறார். புஸ்தகத்தின் புறம்பாக முத்தரிக்கப்பட்டிருந்தது என்றும், அவை முத்தரிக்கப்பட்ட இரகசியங்கள் வேதத்திலே எழுதப்பட்டிருக்காத காரியங்களாக இருக்கும் என்றும் நான் எப்பொழுதும் நினைப்பேன். ஆனால் அவர் அப்படியாக செய்யமாட்டார் என்று எனக்கு விளங்க வைக்கப்பட்டது என தனது தவறான முந்தைய கருத்தை, பழைய எண்ணங்களை திருத்துகிறார். செய்தி : ஏற்றக்காலத்தில் ஆவிக்குரிய ஆகாரம், பத்தி.83, நாள்.18.07.1965 ஆக ஐயன்மீர், இதுவா சமயம்? முத்திரைகளின் வெளிப்பாடு பிரசங்கிக்கப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் கழித்து தனது பழைய கருத்துக்களை மாற்றுகிறார். இதுகுறித்து நம்மில் அநேகர் சிந்திப்பது இல்லை. கண்மூடித்தனமாக செய்திகளை வாசிக்கின்றார்கள், அவ்வாறாகவே வியாக்கியானம் செய்கிறார்கள். இது செய்தியை குழப்பும் குழப்பவாதிகளின் செயல்பாடுகள் ஆகும். பாருங்கள் எழுதப்பட்ட வேதவாக்கியங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. அது எப்பொழுதும் எக்காலத்திலும் அப்படியே இருக்கும். நாம் வேதவாக்கியங்களில் இது குறித்து இப்படி காணப்படுகிறது எனச்சொல்லி அதிலே நிலைத்திருக்க வேண்டும். வேதத்தை நாம் தனிப்பட்ட முறையில் வியாக்கியானம் செய்யக்கூடாது. நமக்கு விருப்பமான வழிகளில் அதற்கு அர்த்தம் உண்டாக்கிக் கொண்டு, அதில் நிலைக்கொண்டு, அதன் அர்த்தம் இதுதான் என முடிவு எடுக்ககூடாது. வேதம் கூறுகிறபடியே அதன் அர்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். **முடிவாக என்னுடைய கருத்து சுருக்கமாக: இந்த ஏழு இடிமுழக்கங்கள், திறக்கப்பட்ட ஏழு முத்திரைகளின் இரகசியங்களை வெளிப்படுத்தின. ஒரு இடிமுழக்கம் முழங்க திறக்கப்பட்ட ஒரு முத்திரையில் அடங்கிய இரகசியம் வெளிப்பட்டது. அவ்வாறாக ஏழு இடிமுழக்கங்களில் திறக்கப்பட்ட ஏழு முத்திரைகளின் இரகசியங்கள் வெளிப்பட்டன. இந்த ஏழு இடிமுழக்கங்களால் (வெளி.10:4) ஏழு முத்திரைகள் உடைக்கப்பட்டு திறக்கப்படவில்லை. எப்படியெனில் ஆட்டுக்குட்டியானவரால் ஏழுமுத்திரைகள் உடைக்கப்பட்டு, திறக்கப்பட்டன. அதில் உள்ள இரகசியங்கள் அடையாளங்களாக (symbols) இருந்தது. ஆதலால் அதன் பொருளை யாரும் புரிந்துக்கொள்ள முடியவில்லை. இப்பொழுது ஏழுஇடிமுழக்கங்கள் அந்த திறக்கப்பட்ட ஏழுமுத்திரைகளில் உள்ள இரகசியங்களை வெளிப்படுத்தியது. இந்த இரகசிய வெளிப்பாட்டை சகோ.பிரன்காமுக்கு காட்சியளித்த ஏழு தேவதூதர்கள் கொண்டிருந்தனர். அதை சகோ.பிரன்காமிற்கு வெளிப்படுத்தினர். அந்த ஏழு தேவதூதர்களும் ஏழு இடிமுழக்கங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆக அந்த ஏழு தேவதூதர்கள் கொண்டிருந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை அவர்கள் ஏழாம்சபைக்கால தூதனுக்கு கொடுக்க அவர் ஏழுமுத்திரைகளின் வெளிப்பாடு என்ற செய்தியின் வாயிலாக சபைக்கு பிரசிங்கித்தார். அது அவ்வளவுதான். இப்பொழுது சரியான ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பீர்களானால், நீங்கள் இன்னும் தவறு செய்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.**

43. காரியம் இப்படியிருக்க சகோ. பிரன்காம் பிரசங்கித்ததைக் கொண்ட ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு செய்தி புஸ்தகம் கர்த்தர் உரைக்கிறதாவது என உபதேசித்துவரும் கோவை, சுந்தராபுரம் குடும்பத்தினர் அறைகுறை வேக்காடுகளே. இவர்கள் தங்கள் கருத்தை மாற்றுவார்களா? சகோ. பிரன்காமை தேவனாக, கிறிஸ்துவாக, சகலத்தையும் அறிந்தவர், அவர் அறியாதது ஒன்றுமில்லை, முழு வேதாகமத்தில் அடங்கியுள்ள வெளிப்பாடுகள் அனைத்தையும் பெற்றவர் என மனம்போன போக்கிலே தூற்றித்திரியும் இவர்கள் அனைவரும் கள்ளக்கபடமுள்ள வேலையாட்களே. சாத்தானின் கூலியாட்களே / கூட்டாளிகளே. சகோ. பிரன்காம் ஏழாம் சபைக்கால தூதன், ஒரு தீர்க்கதரிசி, தேவனுடைய வார்த்தை அவருக்கு வந்தது என்ற நோக்கத்தோடு மாத்திரமே அவரை பாருங்கள். அதே வேளையில் அவரும் தவறுக்குரியவர். நான் ஏராளமான தவறுகளைச் செய்துள்ளேன், தவறுகளை செய்துக்கொண்டும் வருகிறேன், இன்னும் தவறுகள் செய்ய வாய்ப்பும் இருக்கிறது என்று தன்னை தாழ்மைப் படுத்துகிறார். தீர்க்கதரிசியாகிய நாத்தான் தனது சுயக்கருத்தை தாவீதிடம் தேவனுடைய வார்த்தையாக கூறினான். தேவன் தாவீதின் பேரில் அன்பு கொண்டுள்ளார் என்பதை அறிந்த நாத்தான், உம்முடைய இருதயத்தில் இருக்கிறதை எல்லாம் செய்யும், தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான். நாத்தான் இங்கு ஒரு தவறை செய்தாலும், அதை அறிந்து செய்யவில்லை. ஆதலால் அவன் எண்ணத்தை கர்த்தர் திருத்தினார் அல்லவா? அதுபோல இங்கு சகோ. பிரன்காமையும் கர்த்தர் திருத்தினார். ஆதலால் சகோ. பிரன்காமை உயர்த்தி, உயர்த்தி தந்திரமாக பிசாசின் வேலையை செய்பவர்களை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். சகோ. பிரன்காம் தன்னுடைய ஊழியத்தின் பாதையில் ஒருபோதும் தன்னை உயர்த்தவில்லை. மாறாக தாழ்த்திக்கொள்ளவே செய்தார். சில வேளைகளில் நாம் யாவரும் தவறுக்குரியவர்களாகவே இருக்கிறோம். அதற்கு சகோ. பிரன்காம் விதிவிலக்கல்ல. அவரும், நானும், நீங்களும் தவறுகளுக்குரியவர்களாகவே இருக்கிறோம். ஒரு தீர்க்கதரிசி கர்த்தர் உரைக்கிறதாவது என்று

கூறும்போது மாத்திரமே அது 100% தேவனுடைய வார்த்தை. மற்றபடி ஊழியர்கள் சிறுசிறு தவறுகளுக்கு உரியவர்களாகவே இருக்கிறார்கள். இதில் நானும் அடங்குவேன்.

44. இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் வலதுகரத்தில் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட ஒரு புஸ்தகம். அது உள்ளும் புறம்பும் எழுதப்பட்டது. அது நித்திய ஜீவனின் உரிமை பத்திரம். ஆதாம் விசுவாசத்திற்கு பதிலாக, தன் மனைவியினால், சாத்தானின் லௌகிக ஞானத்தை தெரிந்துக்கொண்டு, தனக்கு தேவனுடைய சிருஷ்டிப்பின்மேல் ஆசீர்வாதமாக கொடுக்கப்பட்ட ஆளுகையின் உரிமை பத்திரத்தை மற்றும் நித்திய ஜீவனை இழந்துப்போனான். ஒவ்வொரு மனிதனும் ஆண் பெண் சேர்கை மூலம் பிறந்தவன். அவ்வாறு பிறக்காத ஆதாம் அவனுக்குண்டாயிருந்த நித்திய ஜீவனின் உரிமையும், இப்பூமியை ஆளுகை செய்யும் உரிமையையும் பறிகொடுத்தான். ஆதாம் தேவனுடைய வார்த்தையில் நிலைகொண்டிருப்பதற்கு பதிலாக தன் மனைவியின் விவேகத்திற்கு செவிகொடுத்தான். ஏவாள் சாத்தானுடன் விவேகித்து, சிந்தித்து, ஒரே சரீரமாக இணைந்து செய்த தன் நடத்தையை ஆதாம் முன் வைத்தாள். ஆதாமும் அதில் பங்குகொண்டு, தேவனுடைய கட்டளையை தள்ளிவிட்டு, தன் புத்திர பாகத்தை விற்றுபோட்டான். ஆதலால் அவன் தேவனுடன் கொண்டிருந்த ஐக்கியத்தையும், நித்திய ஜீவனின் உரிமையையும் இழந்தபோது தன் சுதந்தரத்தையும், சொத்து உரிமை அனைத்தையும் இழந்துப்போனான். அவன் தொடக்கத்தில் பூமியின்மேல் பரிபூரண அதிகாரம் கொண்டிருந்தான். ஏனென்றால் அவன் தேவனுடைய குமாரன். லூக்.3:38 (Son of God) அவன்தன் ஜீவனை இழந்தப்போது அந்த ஜீவனில் இருந்த தனது சொத்துரிமைகளையும் இழந்துப்போனான். அவன் பூலோகத்தின் தேவனாகயிருந்தான். இந்த பூமியை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான். அவன் அனைத்து சிருஷ்டிகளுடன் பேசினான். மரங்களிடம் பேசினான். மிருகங்களுடனும் பேசினான். மச்சங்களோடும் பேசினான், மலைகளோடும் பேசினான். அவைகள் அனைத்திற்கும் இவன் பெயரிட்டான். இவன் இயற்கையை கூட நிறுத்தினான். அவனால் எதுவேண்டுமானாலும் செய்ய முடிந்தது. அவனுக்கு தடைப்பட்டது ஒன்றும் இல்லை. இப்பொழுது சாத்தானுடைய விவேகத்திற்கு செவிகொடுத்த தன் மனைவியின் ஆலோசனையினால் அந்த உரிமைகள் அனைத்தையும் இழந்து போனான். அவனுடைய நிலை இப்பொழுது பரிதாபத்திற்குரியதாயிற்று.

45. ஆதாம் பூமியின் மேலிருந்த தன் சுயாதீனத்தை இழந்துப்போனான். அவன் அதை யாருக்கு விற்றானோ அவன் – சாத்தான். அவனது அதிகாரத்திற்கு அது சென்றது. ஆதாம் தேவன் பேரில் கொண்டிருந்த விசுவாசத்தை, பிசாசின் விவேகத்திற்கு விற்றுப்போட்டான். ஆதலால் அவன் பெற்றிருந்த நித்திய ஜீவன், ஜீவவிருட்சத்தின்மேல் அவனுக்கிருந்த உரிமை, பூலோகத்தின் மேல் அவனுக்கிருந்த உரிமை எல்லாவற்றையும் சாத்தானுக்கு விற்றுப்போட்டான். ஆதாம் தன் கரத்திலிருந்த உரிமைகள் அனைத்தையும் சாத்தானின் கரத்திற்கு மாற்றிப்போட்டான். இதனால் ஆதாமுக்கும் அவன் பின் சந்ததிக்கும் நித்திய ஜீவன் மற்றும் பூமியின் மேலிருந்த உரிமை பறிபோனது. ஆதாம் பெற்றிருந்த அந்த ஆசீர்வாதம் நித்திய ஜீவனுக்கும் பூமிக்கும் உரிய உரிமை பத்திரமாக இருந்தது. இப்பொழுது கவனியுங்கள், ஆதாம் அதை இழந்தபோது, சாத்தானின் கரங்கள் அதை ஏற்றுக்கொள்ள, பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவனுடைய கரங்கள் சுத்தமானது அல்ல. அசுத்தமான அவனுடைய அந்த கரத்தினால் ஆதாம் இழந்த ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள / ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் அது அந்த ஆசீர்வாதத்தின் ஊற்றாகிய, அதன் மூல சொந்தக்காரராகிய தேவனிடத்திற்கு சென்றது. இது குறித்து ஒரு எடுத்துக்காட்டு : தேவனுடைய ஊழியக்காரர்கள், ஒருவனுடைய வீட்டிற்குள் செல்லும் போது அந்த வீட்டாரை வாழ்த்த வேண்டும். அந்த வீடு பாத்திரமானதாயிருந்தால் நீங்கள் கூறிய அந்த சமாதானம் / ஆசீர்வாதம் அவர்கள் மேல் தங்கும். அந்த வீடு அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின அந்த சமாதானம் / ஆசீர்வாதம் உங்களிடத்திற்கே திரும்பும். (தியானியுங்கள் மத்.10:12,13) ஆக தேவனால் ஆதாம் பெற்ற நித்திய ஜீவன் மற்றும் ஆளுகை ஆசீர்வாதத்தை பூமிக்கும், நித்திய ஜீவனுக்கும் உரிய உரிமை பத்திரத்தை இழந்துப் போனான். ஆதலால் அது மறுபடியும் அதன் மூலச் சொந்தக்காரரான தேவனை அடைந்தது. உரிமை பத்திரத்தை பெற்றவன் அதற்கு அபாத்திரமாய் போனதினால், அது மீண்டும் தேவனிடத்திற்கு, அதன் மூலச் சொந்தக்காரரான தேவனை அடைந்தது. ஆம் அதன் சொந்தக்காரரான சர்வ வல்லமையுள்ள தேவன் கரத்தை வந்தடைந்தது. இந்த ஜீவபுஸ்தகத்தின் உரிமையாளர் அவரே. அவரே அதை தனது வலது கரத்தில் கொண்டிருந்ததை நாம் வெளி.5:1ல் காண்கிறோம். ஆட்டுக்குட்டியானவர் நேராக தேவனுடைய வலதுகரத்தினிடம் சென்று, தேவனுடைய கரத்திலிருந்து புஸ்தகத்தை எடுத்து தமது உரிமைகளைக் கோரினார். நான் அவர்களுக்காக மரித்தேன். நான் தான் அவர்களது மீட்கும் உறவினன். நான் தான் மத்தியஸ்தன். என் இரத்தம்தான் சிந்தப்பட்டது. நானே கீழிறங்கி அதை செய்து முடித்தேன், நான் தான் அவர்கள் மீட்பர், நான் கிரயத்தை செலுத்தி விட்டேன். நான்தான் அவர்களுக்காக பரிந்து பேசினேன். இப்பொழுது அவர்கள் பாவத்தில் விழுந்தபோது இழந்துப்போன உரிமை அனைத்தையும் பெற்றுக்கொள்ள வந்தேன் எனக்கூறி தம்முடைய மீட்கும் உரிமைகளை பெற்றுக்கொள்ள சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தவருடைய வலதுகரத்தில் இருந்து அந்த புஸ்தகத்தை எடுத்தார்.

46. இப்பொழுது தேவனுடைய பிரமாணத்தின்படி ஆதாம் இழந்ததை மீட்க மீட்கும் இனத்தான் அவசியம். இங்கு மீட்பு என்ற சொல்லுக்கு, தனக்கு உரிமையான ஒன்றை பிறன் ஒருவன் பெற்றுக்கொண்டான். அவனிடமிருந்து அதை திரும்ப பெறுதல் ஆகும். அதற்கு ஒரு கிரயத்தை செலுத்தவேண்டிய நிலையும் ஏற்படும். அதாவது கிரயம்

கொடுத்து விடுதலை பெறுதல். இதுக்குறித்து நீங்கள் லேவி.25 அதியின் கடைசி பகுதியில் தியானிக்கலாம். இப்பொழுது ஆதாமை மீட்க அவன் குடும்பத்தில் உள்ள அவனைச்சேர்ந்த இனத்தாரில் யாராவது ஒருவர் தேவை. அவர் மாத்திரமே அதை மீட்கலாம். அல்லது அவன் தன்னை தானே மீட்டுக்கொள்ளலாம். ஆனால் ஆதாமினால் அதை மீட்க முடியவில்லை. ஏனென்றால் அவன் தேவனிடமிருந்து தன்னை வேறுபிரித்துக்கொண்டான். ஆதலால் இப்பொழுது அவனுக்கு ஒரு மீட்பர் அவசியம். அதற்கு ஒரு மீட்பர் இனத்தான் தேவை. அவர் அவனைப்போன்று ஒரு மனிதனாக இருக்க வேண்டும். இதற்கென்று ஒரு தேவதூதனை தெரிந்துக்கொள்ள முடியாது. தேவதூதனுக்கு ஆதாம் இனத்தான் அல்ல. தேவதூதன் வித்தியாசமான சரீரம் கொண்டவன். அவன் முற்றிலும் வித்தியாசமானவன். ஆதாம் ஏவாள் தவிர பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் ஆண் பெண் இனச்சேர்க்கையில் பிறந்தவர்கள். ஆனால் ஆதாம் ஏவாள் அப்படியல்ல. ஏதேன் தோட்டத்தில் சர்பம், ஏவாள் சேர்க்கையின் மூலமாகவே பாவம் உண்டானது. அங்குதான் சர்பத்தின் வித்து தோன்றினது. இப்பொழுது ஆதாமை மீட்கும் இனத்தான் மானிட வர்க்கத்தில் பிறக்க வேண்டும். இதற்கு வேறு வழி ஏதும் இல்லை. ஆதலால் கன்னிப்பிறப்பு அதை உற்பவித்தது. கன்னியின் மூலம் தோன்றிய பிறப்புதான் மீட்கும் இனத்தானை தோன்றச் செய்தது. சர்வ வல்லமையுள்ள தேவனே, புஸ்தகத்தின் உரிமையாளரே இம்மானுவேலரானார். உரிமை பத்திரத்திற்குரியவரே நம்மில் ஒருவரானார். ஆக இவர் மூலமாகவே மீட்கும் இனத்தானை குறித்த பிரமாணம் நிறைவேறிற்று. பரிசுத்த ஆவியானவர் மரியாள் மேல் நிழலிட்டார். அதன்மூலம் இயேசு கன்னியின் வயிற்றில் தோன்றினார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். இயேசு யூதகுலத்தில் பிறந்தாலும், அவர் யூதன் அல்ல. அவர் புறஜாதியுமல்ல. அவர் தேவனாயிருந்தார். அவர் உடம்பிலுள்ள இரத்தம் ஆண் பெண் இனச்சேர்க்கையினால் உண்டானது அல்ல. மாறாக அது பரிசுத்தஆவியினால் உண்டாக்கப்பட்ட தேவனுடைய இரத்தம். நாம் யூதனுடைய இரத்தத்தினாலோ, அல்லது ஒரு புறஜாதியினுடைய இரத்தத்தினாலோ மீட்கப்படாமல், இரட்சிக்கப்படாமல் தேவனுடைய சுயரத்தத்தினாலே மீட்கப்பட்டோம், இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய கிருபை. இயேசு கிறிஸ்து எனப்பட்டவரில் மட்டுமே இனத்தானை சந்திக்க முடிந்தது. கிறிஸ்து ஆதாம் மற்றும் அவன் வம்சவழியினர் இழந்த உரிமைகள் அனைத்தையும் மீட்டுக்கொண்டார். ஆனாலும் அவர் இன்னும் மத்தியஸ்த ஊழியத்தை செய்து, தம் பிரஜைகளை தம்முடைய மந்தையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்ட அந்த கடைசி ஆடு பூமியில் தோன்றி, வளர்ந்து, மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியை பெற்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாக முத்தரிக்கப்படும் வரை அவர் தம்முடைய மத்தியஸ்த ஊழியத்தில் நிலைகொண்டிருக்க வேண்டும். அதற்காக அவர் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார். இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே அவருடைய பொறுமை ஒருவேளை உனக்காகவே இருக்கலாம். ஆதலால் நீ மனம் திரும்புவாயா?

47. இயேசு பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு இந்த உலகத்தில் வந்தார். நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்று இரவு, மூன்று பகல் பூமியின் இருதயத்தில் இருந்தார். அதன்பின் உயிர்த்தெழுந்தார். மறுபடியும் தான் எந்த ஸ்தானத்திலிருந்து வந்தாரோ, அதே ஸ்தானத்திற்கு அதாவது பிதாவினிடத்திற்கு சென்றார். (யோ.16:28) அதன்பின் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை நம்மிடத்திற்கு அனுப்பினார். அவரும் பிதாவினிடத்திலிருந்து, அதாவது பிதாவின் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டவரே. (யோ.15:26) One God and Father of all, This one God and Father is above all, through all, in you all. பாருங்கள். எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவுமானவர், எல்லார்மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும், (எபே.4:6) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற நிலையில், ஆனால் ஆள்தத்துவத்தில் அல்ல மாறாக மூன்று வித்தியாசமான பதவிகளில் / ஸ்தானங்களில், ஆனால் ஒரே தேவன். (சங்.68:18, மத்.1:23, யோ.14:17)

48. இப்பொழுது சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், 24 மூப்பர்களுக்கும் மத்தியில் யோவான் நிற்கக்கண்ட அந்த அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி எங்கிருந்து வந்தது? மூப்பர்களில் ஒருவன் இதோ, யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தை திறக்கவும், அதன் ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயம் கொண்டிருக்கிறார் என்றான். ஆனால் யோவானோ அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை கண்டான். மூப்பர்களில் ஒருவன் அவரை யூதா கோத்திரத்து சிங்கம் என்றான். ஏன்? அவர் யூதா கோத்திரத்திலிருந்து வரவேண்டும். சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை. (ஆதி.49:10) யூதா கோத்திரத்தின் சின்னம் - சிங்கம். ஆதலால் மூப்பரில் ஒருவன் யூதா கோத்திரத்து சிங்கம் என்று அழைத்தான். ஆனால் யோவான் திரும்பி பார்த்தபோது ஒரு ஆட்டுக்குட்டியை கண்டான். அது காயம்பட்டு, இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. அது கொலைசெய்யப்பட்டாலும் மறுபடியும் ஜீவனுள்ளதாயிருக்கிறது. ஆதலால் அவர் இரத்தம் தோய்ந்தவராயிருந்தார். அவர் அடிக்கப்பட்டார். ஆனால் மறுபடியும் உயிர்தெழுந்தார். அவர் உயிரோடெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து, அதாவது பரலோகத்தில் உள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே வீற்றிருந்து (பிதா என்ற ஒரு நபருடைய வலது பாரிசத்தில் அல்ல.) (எபி.8:1, மாற்.16:19) நமக்காக, கடைசி ஆடு மந்தையில் சேரும்வரை பரிந்து பேசிக்கொண்டிருக்க வேண்டும். இப்பொழுது அவர் தமது மகிமையிலிருந்து புறப்பட்டு வந்து நிற்கிறார். (எசா.48:11) அவர் மகிமையிலிருந்து புறப்பட்டு தம்மை நமக்கு வெளிப்படுத்த முன்னோக்கி வருகிறார். இப்பொழுது அவர் அடிக்கப்பட்ட வண்ணமாய், பரிந்து பேசும் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார். அவர் எதற்காக வருகிறார்? அவரால் மீட்கபட்டவர்களை உரிமையாக்கி

கொள்வதற்கு. அல்லேலூயா! அவர் தமது மீட்பின் உத்தியோகத்தை முடித்துவிட்டாலும் இன்னும் தமக்கு சேரவேண்டியவைகளை உரிமையாக்கிக் கொள்ள அழைக்கப்படவில்லை. மாறாக இப்பொழுது தமது உரிமைகளை பெற்றுக்கொள்ள அவர் காட்சியில் வருகிறார். அவர் தம்முடைய மீட்கும் உரிமைகளை பெற்றுக்கொள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவருடைய வலதுகரத்திலிருந்து, அதாவது மகத்துவ ஆசனத்திலிருந்த அந்த புஸ்தகத்தை எடுத்தார். ஆதலால்தான் வாங்கினார் என்று கூறப்படவில்லை. ஏனென்றால் அவரைத் தவிர சிங்காசனத்தில் வேறு யாருமில்லை. ஆதலால் அவர் யாரிடத்திலிருந்தும் வாங்க தேவையில்லை. இப்பொழுது அது ஆட்டுக்குட்டியானவருக்கே சொந்தம். இதுவரை அது தேவனுடைய கரத்தில் அதாவது தேவனுடைய மகத்துவ ஆசனத்தில் இருந்தது. இப்பொழுது ஆட்டுக்குட்டியானவருடைய கரத்திற்கு கைமாறிவிட்டது. சர்வ சிருஷ்டிப்பில் மீட்கப்பட்டவர்களின் உரிமை பத்திரம் இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் கரத்திலே. கவனியுங்கள். தேவனும் ஆட்டுக்குட்டியும் ஒருவரே, இருவர் அல்ல. வானத்தில் ஒரு சிங்காசனம் தான் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தில் ஒருவரைத்தான் யோவான் கண்டான். அந்த சிங்காசனத்தில் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருந்ததாக வெளி.22 1,3 வசனங்களில் நாம் காண்கிறோம். சர்வ சிருஷ்டிப்பின் உரிமை பத்திரம் இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் கையில் இருக்கிறது. மானிட வர்கத்திற்கு அதை மறுபடியும் அவர் அளிக்க வந்திருக்கிறார். ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததி இழந்து போனதை மீட்டுக்கொண்டு வந்திருக்கிறார். அவர்களை மறுபடியும் தேவனுடைய குமாரனும் குமாரத்தியுமாக்க, அவர்கள் இழந்ததை திரும்பவும் அளிக்க வந்திருக்கிறார். அவர்கள் இழந்துபோன அனைத்தையும் மறுபடியும் பெற்று ஏதேன் தோட்டத்தில் வந்து சதாகாலமும் நித்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும். இது ஒரு ஆச்சரியமான கிருபை அல்லவா?

49. இப்பொழுது சுருக்கமாக : யோவான் கண்ட தரிசனத்தில் ஒரு புஸ்தகம் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவருடைய வலது கரத்தில் காண்கிறான். அது உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, எழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தது. அது மீட்பின் புஸ்தகம். இது ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை உள்ள இரகசியங்களைக் கொண்டதாயிருக்கிறது. தேவனுடைய இரகசியங்கள் யாவும் இந்த ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புஸ்தகங்களில் அடங்கியிருக்கிறது. இந்த இரகசியங்களைக்கொண்ட புஸ்தகம் அதாவது சுருள் உட்பாகத்தில் சுருட்டப்பட்டு வெளிப்புறத்தில் முத்தரிக்கப்பட்டுள்ளது. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகம் வெளிப்படுத்தின விசேஷம் 10-ஆம் அதியில் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படுகிறது. (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - புதிய பதிப்பு - பக்கம்.120, பத்தி.29). அதோடு மட்டுமல்ல ஏழு முத்திரைகளில் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகத்தில் அடங்கியுள்ள இரகசியம் ஏழாம் சபையின் தூதன் செய்தி முழங்கும்போது வெளிப்படும். ஆட்டுக்குட்டியானவர் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகத்தை எடுத்து, அதன் முத்திரைகளை உடைத்தார். இப்பொழுது அதனுள் அடங்கிய இரகசியத்தை ஏழாம் சபைக்கால தூதனுக்கு காண்பிக்கிறார். இப்பொழுது இந்த இரகசியங்கள் வெளிப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதால், இனி காலம் செல்லாது என்ற செய்தியை அந்த வேறொருரு பலமுள்ள தூதன் கொண்டுவருகிறான். இனி காலம் செல்லாது என்ற செய்தி வானத்தின் கீழிருக்கிற பூமிக்கும், சமுத்திரத்திற்கும் செல்லவேண்டும். (ஆதி.1:9,10) ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். (மத்.23:15) சமுத்திர தீவிகளிலும் அவருடையவர்கள் மற்றும் அவருடைய ஜனத்தில் மீதியானவர்கள் உண்டு. (ஏசா.11:11) கர்த்தரின் நாமத்தை சமுத்திர தீவுகளில் மகிமைப்படுத்துகிறவர்கள் உண்டு. (ஏசா.24:14,15) நியாயத்தீர்ப்பு நாளில் பூமியும், சமுத்திரமும் தங்களில் உள்ளவர்களை ஒப்புவிக்கவேண்டும். (தானி.12:2, வெளி.20:13) ஆதலால் தான் இனி காலம் செல்லாது என்ற செய்தி வானத்தின் கீழெங்கும் பூமி, சமுத்திரத்திற்கு சாட்சியாக செல்லவேண்டும். ஆதலால்தான் பூமிக்கும் சமுத்திரத்திற்கும் சாட்சியாக அந்த தூதன் ஒரு பாதத்தை பூமியின் மேலும் மற்றொரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும் வைத்திருந்தான். (வெளி.10:2) ஆனாலும் இது தத்ரூபமான தோற்றமில்லை. மாறாக பிரசன்னம். பிரன்காம் - இடதுகால், அமெரிக்கா, வேலூர் தாமஸ் - வலது கால் - இந்தியாவை குறிக்கிறது என்பது மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களின் உபதேசம்.

50. முடிவில் வெளி. 5:1 புஸ்தக விமர்சனம் சுருக்கமாக :

1. இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம்.
2. அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். அவர் தேவனும் ஆட்டுக்குட்டியுமானவர்.
3. அவரது வலதுகரத்தில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட ஒரு புஸ்தகம்.
4. இது உலகத்தோற்றத்திற்கு முன்னே எழுதப்பட்ட ஒரு சுருள் புஸ்தகம்.
5. இது மனுக்குல மீட்பின் முழு திட்டம் அடங்கிய புஸ்தகம். ஏதேன் தோட்டத்தில் ஆதாம், தேவனுடைய கட்டளையில், வார்த்தையில் நிலைகொண்டிருக்கவில்லை. ஆதி.2:16,17, 3:6 தன் மனைவி ஏவாளின் விவேகத்திற்கு செவிகொடுத்தான். அவள் சாத்தானாள் வஞ்சிக்கப்பட்டாள். ஆதாம் இதனால் பாவம் செய்தான். (ரோ.5:12,19) இதனால் ஆதாம் தேவனுடைய வார்த்தையை, கட்டளையை தளரவிட்டு தன் புத்திர சுவிகாரத்தை ஏசாவைப் போல் விற்றுப்போட்டான். ஆதி.3:6,22-24, 25:30,34. இதனால் தனது சொத்துரிமை ஆதி.1:28,30 தேவனோடு கொண்டிருந்த ஐக்கியம் ஆதி.3:8 தேவகுமாரன் என்ற ஸ்தானத்தில் பெற்றிருந்த நித்திய ஜீவனின் உரிமை லூக்.3:38 அனைத்தையும் இழந்தான். பூமியின் மீதுள்ள தன் பூரண அதிகாரம், பூமியின் மீதுள்ள ஆளுகை அனைத்தையும் இழந்தான். ஆதி.2:19,20 பாவத்தில் (தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள அவிசுவாசம்) விழுந்தான். தேவனுக்கு

கீழ்படியாமல் போனான். ஆதலால் தன் உரிமைகளை இழந்தான். தன் உரிமைகளை சாத்தானுக்கு விற்றுப்போட்டான். ஆனால் ஆதாமுக்கு இருந்த உரிமை, உரிமை பத்திரம், மூலப்பத்திரம், சாத்தானுடைய கரங்களை அடையவில்லை. ஏனென்றால் அவன் அதற்கு பாத்திரவானாகயில்லை. ஆதலால் அது மீண்டும் அதை ஆதாமுக்கு கொடுக்க அதன் சொந்தகாரரான தேவனை அடைந்தது. இப்பொழுது விழுந்த குமாரனை, அவன் இழந்த உரிமைகளை மீட்க, தேவனுக்கு கிரயம் செலுத்த வேண்டும். நீங்கள் கிரயத்திற்காக கொள்ளப்பட்டீர்கள். (1கொரி.6:20) இதற்காக தேவன் மரியாளிடத்தில் பிறந்து, மாம்சத்தில் வெளிப்பட்டு, நம்முடைய இனத்தானாகி, இரத்தம் சிந்தி தம்முடையவர்களை மீட்டுக்கொண்டார். இரத்தத்தின் காரணமாகவே மானிடவர்க்கம் பாவத்தில் விழுந்தது. ஆதலால் இரத்தம் மாத்திரமே அவனை மீட்க முடியும். போவாஸ், ரூத்தை மீட்டுக்கொண்டது போன்று (ரூத்.4அதி) நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுவிக்கும்படி ----- நம்முடைய பாவங்களுக்காக தம்மை தாமே ஒப்புக்கொடுத்தார். (கலா.1:4) கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். (கலா.3:13) அவருடைய (தேவன்) கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய (இயேசு) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் (இயேசு) நம்மை சகல அக்கிரமங்களின்று மீட்டுக்கொண்டு, நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்.2:14) குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டோம். (1பேது.1:19) தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் ....... கிரயம் செலுத்தி நம்மை மீட்டார். (அப்.20:28) இயேசு தம்முடைய சுய இரத்தத்தினால் ஒருதரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணினார். (எபே.9:12) அல்லேலூயா! கிருபை, கிருபை.

6. இந்த மீட்பின் திட்டத்தில் உள்ள இரகசியங்களை அந்த ஏழு முத்திரைகள் முத்தரிக்கின்றன.

7. முத்திரைகள் அந்த இரகசியங்களின் பாதுகாப்புக்கு அடையாளம்.

8. நீங்கள் ஒருமுறை முத்தரிக்கப்பட்டால் எபே.4: 30 தேவன் உங்களை ஏற்றுக்கொண்டார். அது தேவன் பூர்த்தி செய்த ஒரு கிரியை. அதிலிருந்து நீங்கள் மறுபடியும் எடுத்துப்போடப்பட மாட்டீர்கள். நீங்கள் நான் பரிசுத்த ஆவியை பெற்று வல்லமையாக ஊழியம் செய்தேன், இப்பொழுது அதை இழந்துவிட்டேன் என கூறலாம். ஆனால் நீங்கள் உண்மையிலே பரிசுத்த ஆவியை பெற்று முத்தரிக்கப்படவேயில்லை. ஏனென்றால் அந்த முத்திரை மீட்கப்படும் நாள் வரைக்கும் நிலைத்திருக்கும் ஒன்றாகும்.

9. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டுள்ள இந்த புஸ்தகத்தில் உள்ள இரகசியங்கள் அனைத்தும் ஏழாம் சபைக்கால தூதன் செய்தி முழங்கும் போதுதான் வெளிப்பட வேண்டியதாக உள்ளது. (வெளி.10:7) இந்த இரகசியங்கள் ஆறு சபைக்காலங்களிலும் ஆராயப்பட்டது. ஆனால் அதற்குரிய காலம் வராததினால் அவர்களால் முழுமையாக விவரிக்க / விளக்க முடியவில்லை.

10. முத்திரைகளின் இரகசியம் வெளிப்படும்போது அது எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை சபைக்கு / மணவாட்டிக்கு கொடுக்கும்.

11. யூதா கோத்திரத்து சிங்கம், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தை எடுத்து, முத்திரைகளை உடைத்து, அதை திறக்க ஜெயம் கொண்டிருக்கிறார். (வெளி. 5:5) இயேசு யூதா கோத்திரத்தில் பிறந்தவர். யூதா கோத்திரத்து சின்னம் - சிங்கம். மூப்பர்களில் ஒருவன் அவரை சிங்கமாகக் கண்டான். ஆனால் யோவான் அவரை அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியாக கண்டான்.

12. இப்பொழுது இந்த ஆட்டுக்குட்டியானவர் எங்கிருந்து புறப்பட்டு வந்தார்? பிதாவின் சிங்காசனத்திலிருந்து. அவர் உயிர்தெழுந்த பின்பு அங்குதான் இருக்கிறார் (மாற்.16:19, எபி.8:1). நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். (ரோ.8:34)

13. முத்திரைகள் உடைக்கப்பட, திறக்கப்பட வேண்டிய நேரமும் வந்துவிட்டது. மீட்கப் பட்டவர்களை உரிமை கோரும் நேரம் வந்துவிட்டது. அப்பொழுது மத்தியஸ்தம் முடிந்துவிடும். இரட்சிப்பு இருக்காது. அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். (வெளி.22:11)

14. இப்பொழுது தேவனுடைய பிரகாரத்திலிருந்து புறப்படுகிறார். அவர் அங்கிருந்து புறப்பட்டு வந்தார். அதன்பிறகு தேவனுடைய சிங்காசனம் நியாயஸ்தலமாக மாறிவிடும்.

15. அது இனி காலம் செல்லாது. வெளி.10:6 என பலமுள்ள தூதன் கூறும் தருணம்.

16. தேவனுக்கும் மனிஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. (1தீமோ.2:5) அந்த மத்தியஸ்தரானவர் பாவத்தில் பிறந்து வளர்ந்த, வளர்ந்துக்கொண்டிருக்கும் உங்கள் போப்பால் முடியாது. இதர ஊழியர்களாலும் முடியாது. பூமியில் ஆண் பெண் இனச்சேர்க்கையில் பிறந்த ஒருவனாலும் முடியாது.

17. மத்தியஸ்தம் செய்துவந்த ஆட்டுக்குட்டியானவருக்கு யார்யார் பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது தெரியும். ஏனென்றால் அவர் உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. (வெளி.13:8) அந்த கடைசி நபர் தோன்றி இரட்சிக்கபடும்வரை அவர் மத்தியஸ்த ஊழியத்தில் நிலைத்திருக்க வேண்டும். இதுவே தேவனுடைய முன்குறித்தலுக்கான பிரமாணம்.

18. கிறிஸ்துவின் மணவாட்டி ஒவ்வொரு சபைக்காலத்திலும் அந்தந்த சபைக்கால தூதனால் அளிக்கப்பட்ட செய்தியை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து கனிகொடுக்கிறவர்களாய் காணப்பட்டு, மீட்கப்படும் நாளுக்கென்று பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுகிறாள்.

51. தேவஇரகசியத்தை வெளிப்படுத்துவது மாத்திரமே ஏழாம் தூதனின் ஊழியமாக அமைந்திருக்கிறது. கடைசி சபை தூதனின் செய்தியானது, இதுவரை தளர்ந்து விடப்பட்டு காணப்பட்ட பாகங்களை எல்லாம் நேராக்கி, சபை எடுக்கப்படுவதற்கென, தேவனுடைய சகல இரகசியங்களையும் வெளிப்படுத்தும். மல்.4ஆம் அதி, வெளி.10:6லும் உரைக்கப்பட்ட இந்த செய்தியாளன் இரண்டு காரியங்களை செய்வார். முதலாவதாக மல்கியா4 உரைத்தபடி, அவர் பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி.10ல் உள்ள ஏழு முத்திரைகளில் இருக்கிற அந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்களை அவர் வெளிப்படுத்துவார். இந்த ஏழு இடிமுழக்கங்கள் குறித்து சற்று கவனியுங்கள். வெளி.10ல் நடந்தது என்ன? பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன். அவன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்பரித்தான். அவன் ஆர்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமாய் முழங்கின. அவ்வெழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின போது, நான் எழுத வேண்டும் என்றிருந்தேன். அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரைப்போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாக கேட்டேன். (வெளி.10:3,4) இங்கு நீங்கள் கவனித்தீர்களானால் அந்த ஏழு இடிகளும் சத்தமாய் முழங்கின. ஆனால் யோவான் எழுத அனுமதிக்கப்படவில்லை. அந்த ஏழு இடிகளின் சத்தத்தில் உண்டான இரகசியங்கள் எழுதிவைக்கப்படவில்லை. ஆனால் அவைகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிற ஒன்றாயிருக்கிறது. ஏனென்றால் சத்தம் முழங்கியது. அந்த சத்தம் ஒரு செய்தியை / இரகசியத்தை கொண்டுவந்தது. ஆனால் அது எழுதப்படாமல் மீட்பின் புஸ்தகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இது ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் வெளிப்படும். தொடக்கத்தில் சகோ.பிரன்காம் செய்தியின்படி எழுதப்படாத ஒன்று வெளிப்படுமானால் அது தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டுவதாகும் அல்லது குறைப்பதாகும். அது கூடாது. ஆதலால் ஏழு முத்திரைகளின் இரகசியம் எழுதப்படாவிட்டாலும் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடி முழங்க, அதை தொடர்ந்து திறக்கப்பட்ட ஒரு முத்திரையில் அடங்கியிருந்த இரகசியம் வெளிப்பட்டது. அவ்வாறாகவே ஏழு இடிகளும் முழங்க, திறக்கப்பட்ட ஏழுமுத்திரைகளில் அடங்கியிருந்த இரகசியங்கள் வெளிப்பட்டது. இடிமுழக்கம் என்பது தேவனுடைய சத்தம். கவனியுங்கள் : ஏழு முத்திரைகள் ஏழுஇடிமுழக்கங்களினின்று வித்தியாசப்பட்டவை. இந்த ஏழு இடிகளினால் ஏழுமுத்திரைகள் திறக்கப்படவில்லை. திறக்கப்பட்ட முத்திரைகளில் அடங்கியிருந்த இரகசியங்களே வெளிப்பட்டன. ஏழு முத்திரைகளும், வெளி.6:1-ல் கூறப்பட்டுள்ள இடிமுழக்கம் போன்ற சத்தத்தின்போது ஆட்டுக்குட்டியானவரால் உடைக்கப்பட்டது. அதாவது முத்திரைகள் திறக்கப்பட்டது. அதாவது வெளி.5:1-ல் புஸ்தகம் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்தது. வெளி.6:1-ல் ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புஸ்தகம் உடைக்கப்பட்டது, திறக்கப்பட்டது. ஆனால் வெளி.10:2,4-ல் திறக்கப்பட்ட புஸ்தகத்தில் உள்ள இரகசியங்கள் இடிமுழக்கங்களினால் வெளிப்படுத்தப்பட்டது. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புஸ்தகம் வெளி.10ஆம் அதியில் கூறப்பட்டுள்ள ஏழு இடிகள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும். (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - புதிய பதிப்பு, பக்கம்.120, பத்தி.29). இந்த தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட இரகசிய சத்தியங்கள்தான் பிள்ளைகளுடைய இருதயத்தை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திருப்பும். (மல்.4:6- ன் பின்பகுதி)

52. **முதலாம் முத்திரை:** ஆட்டுக்குட்டியானவர் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழுமுத்திரைகளினால் முத்தரிக்கப்பட்ட புஸ்தகத்தில் உள்ள முத்திரைகளில் ஒன்றை உடைக்க யோவான் கண்டான். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று அவனை நோக்கி : நீ வந்துப்பார் என்று இடிமுழக்கம் போன்ற சத்தமாய் சொல்லக்கேட்டான்.(வெளி.6:1) இந்த நான்கு ஜீவன்கள் குறித்து வெளி.4:6-8 வசனங்களில் காண்கிறோம். யோவான் ஆவிக்குள்ளாகி, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்ததையும், அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றியிருந்ததையும் கண்டான்.(வெளி.4:2) இப்பொழுது அந்த சிங்காசனத்தின் மத்தியிலும், அந்த சிங்காசனத்தை சுற்றிலும் நான்கு ஜீவன்களை காண்கிறான். முதலாம் ஜீவன் சிங்கத்துக்கும், இரண்டாம் ஜீவன் காளைக்கும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகமுள்ளதாயும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாயிருக்கவும் கண்டான்.(வெளி.4:6,7) தேவன் மாம்சத்தில் தோன்றியபோது அவரது தோற்றத்தை / பார்வையை (aspect) இந்த முகங்கள் சித்தரிக்கிறதாக உள்ளது. மத்தேயு இயேசுவை ராஜாவாகவும், மாற்கு அவரை ஒரு ஊழியக்காரனாகவும், லூக்கா அவரை ஒரு மனுஷகுமாரனாக மனிதத்தன்மை உள்ளவராகவும், யோவான் அவரை தேவகுமாரனாக அவருடைய தெய்வீக தன்மையை எடுத்துக்காட்டுகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஆக இந்த நான்கு ஜீவன்களும் நான்கு சுவிசேஷங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

53. இந்த சுவிசேஷமானது சிங்கத்தைப்போன்று கண்டிப்பு, துணிவு, தைரியம் உடையதாக முன்செல்கின்றது. அப்போஸ்தலர்களிடம் காணப்பட்ட துணிவை, தைரியத்தை, கண்டிப்பை நீங்கள் (அப்.4:30, 5:28,29,40,41) வசனங்களில் தியானிக்கலாம். அடுத்து சுவிசேஷமானது ஒரு காளையைப்போன்று சுமைதாங்கியாக காணப்படுகிறது. (அப்.8:1,4) மேலும் மனுஷனைப்போன்று விவேகமுள்ளதாக ஸ்தேவானின் சாட்சியிருந்தது. (அப்.6:10) அடுத்து பறக்கிற கழுகைப் போன்று சுவிசேஷம் துரிதமாக, வேகமாகச் சென்றது. (அப்.26:7) இந்த நான்கு ஜீவன்களும் தேவதூதர்கள் அல்ல. மாறாக அவர்கள் சேராபீன்கள். இவைகளைக் குறித்து நீங்கள் எசே.1-ம் அதியில் தியானிக்கலாம். ஆக இந்த நான்கு ஜீவன்களின் தன்மை நான்கு சுவிசேஷங்களின் தன்மைக்கு ஒத்ததாக இருந்தது. இந்த நான்கு ஜீவன்களும் மேற்கூறிய நான்கு வல்லமைகளை குறிக்கிறது. இவைகள் முறையே நான்கு திசைகளில் உட்கார்ந்துக்கொண்டு, அப்போஸ்தலர்களுடைய நடபடி புஸ்தகத்தை காவல் செய்கிறது. இப்பொழுது

இந்த நான்கு ஜீவன்களில் ஒன்று (சிங்கம்) யோவானை நோக்கி : முதலாம் முத்திரையின் கீழ் அடங்கியுள்ள இரகசியத்தை வந்துப்பார் என்று அழைக்கிறது. முதல் நான்கு முத்திரைகளில், முதலாம் வசனம் முத்திரை உடைக்கப்படும்போது அதன் இரகசியத்தை வந்துக்கான யோவானுக்கு அழைப்புக்கொடுக்கிறது. இரண்டாவது வசனம் யோவான் எதைக்கண்டான் என்பதைக்குறித்து விளக்குகிறது. இப்பொழுது ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைத்தார். ஒரு முத்திரை திறக்கப்படும்போது, ஒரு செய்தி அளிக்கப்படுகிறது. இப்பொழுது யோவான் ஒரு வெள்ளை குதிரையை காண்கிறான். அதன்மேல் வீற்றிருந்தவன் ஒரு வில்லை பிடித்திருந்தான். அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது. அவன் ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான். இது ஒரு அடையாளமாகவே இருந்தது. இந்த அடையாளங்களின் உட்பொருள், இரகசியம் யோவானுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இதுகுறித்து முதலாம் சபைகாலம் முதல் இந்த அடையாளங்களில் உள்ள இரகசியத்தை அறிய பலர் முயற்சித்தார்கள். இதுகுறித்து இப்படியிருக்குமோ / அப்படியிருக்குமோ என்று அநேக சம்பவங்களை குறித்து யூகித்தார்கள். ஆனால் இதன் உட்பொருள் இதுதான் என்று ஆணித்தரமாக யாராலும் கூறமுடியவில்லை. ஏனென்றால் அது ஏழாம்சபைக்கால தூதனுக்கடுத்த செய்தியாகும். அதுவரை சபை காத்திருக்க வேண்டியதாயிருந்தது. இந்த வார்த்தைகள் முடிவுக்காலம் மட்டும் புதைப்பொருளாக வைக்கப்பட்டும் முத்தரிக்கப்பட்டும் இருக்கும். (தானி.12:9) இப்பொழுது ஏழாம் சபைக்கால தூதனால் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டுவிட்டதால் நாம் முடிவுகாலத்தில் இருக்கிறோம் என்பது உறுதியாயிற்று.

54. இப்பொழுது இந்த முத்திரைகள் குறித்து ஏழாம்சபைக்கால தூதனால் வெளிப்படுத்தப்பட்ட செய்தியை கவனியுங்கள். இதுதான் தேவனுக்கு முத்திரைகளின் அர்த்தத்தை வெளிப்படுத்த வேண்டிய நேரம். கவனியுங்கள். யோவானுக்கு அது இரகசியமாகவே இருந்தது. அந்த சமயம் இரகசியம் வெளிப்படத்தக்க தருணமாக இல்லை. இரகசியம் வெளிப்பட ஏற்ற வேளை வரும் வரை அது வெளிப்படமுடியாது. ஏழாம்தூதனுடைய சத்தத்தின் நாட்களில் ...... தேவரகசியம் நிறைவேறும். (வெளி.10:6) ஆட்டுக்குட்டியானவர் கையில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு முத்திரைகளில் ஒன்றை உடைத்தார், திறக்கிறார். அந்த நேரத்தில் தானே வெள்ளை குதிரைமீது ஒருவன் புறப்பட்டான். முத்திரைகளை உடைத்தது யார்? ஆட்டுக்குட்டியானவர். அவர் கிறிஸ்து. ஆக கிறிஸ்து முதலாம் முத்திரையை உடைத்துக்கொண்டு நிற்கும்போது அதே நேரத்தில், அந்த மணிவேளையில் தானே வெள்ளைக்குதிரை மீது அவர் எப்படி புறப்பட்டுச்செல்லமுடியும்? நிச்சயமாக அப்பொழுது புறப்பட்டுச் சென்றவன் கிறிஸ்துவாக இருக்க முடியாது. வெளி.19:11-13-யில் கிறிஸ்து வெள்ளைக்குதிரை மீது ஏறியிருந்ததாக காண்கிறோம். ஆதலால் இந்த நபர் வெள்ளைக்குதிரைமீது வீற்றிருந்து கிறிஸ்துவைப்போல் நடித்து ஆள்மாறாட்டம் செய்கிறவனாகயிருக்கிறான்.(2கொரி.11:14,15) கிறிஸ்துவுக்கு அங்கு தேவனுடைய வார்த்தை என்ற ஒரு நாமம் உண்டு. ஆனால் இங்கு இவனுக்கு நாமம் எதுவும் இல்லை. அடுத்து இவன் கையில் வில் இருந்தது. ஆனால் வில்லோடு சேர்ந்த அம்பு இல்லை. இடியுடன் மின்னல் உண்டு. ஆனால் இங்கு இடி உண்டு. மின்னல் இல்லை. ஆதலால் இது ஒரு ஆள்மாறாட்டமேயன்றி, மற்றபடியல்ல. மேலும் கிறிஸ்து தமது வாயிலிருந்து புறப்பட்ட பட்டயத்தினால் ஜெயிக்கிறார். அம்பினால் அல்ல. கிறிஸ்துவினுடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயம் என்ன? அது ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை. (வெளி.19:21, எபி.4:12) மேலும் கிறிஸ்துவினுடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. (வெளி.19:12) ஆனால் இங்கு காணப்பட்டவனிடம் ஆரம்பத்தில் கிரீடம் இல்லை, அதன்பின்தான் கொடுக்கப்படுகிறது.

55. கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் (மத்.16:16) யூதாஸ் – பிசாசு / கேட்டின் மகன். (யோ.17:12) கிறிஸ்து இந்த உலகத்தை விட்டுச்சென்றபோது, யூதாசும் சென்றான். கிறிஸ்து பரிசுத்த ஆவியாக மறுபடியும் சபைக்குள் வந்தார். யூதாசின் ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியாக சபைக்குள் நுழைந்தது. இதுகுறித்து இப்பொழுதோ அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள் என யோவான் கூறுகிறான். (1யோ.2:18) சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்பட்டான். பாருங்கள், அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாய்!..... நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! (எசா.14:12) ஆக வானத்திலிருந்தவன் இப்பொழுது பூமியில் இருக்கிறான். கவனியுங்கள் : ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி.1:1) ஆனால் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது எனக் காண்கிறோம். (ஆதி.1:2, எரே.4:23) ஆனால் சிருஷ்டி கர்த்தரோ வானங்களை சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாக சிருஷ்டியாமல், அதை குடியிருப்புக்காக செய்து படைத்து, அதை உருவேற்படுத்தினார். (ஏசா.45:18) வானமும் பூமியும் சிருஷ்டிப்பின் வேளையில் பரிபூரண நிலையில் இருந்தது. (ஆதி.1:31) லூசிபரின் சூழ்ச்சியினால் நியாயத்தீர்ப்பு அவன்மீது விழுந்தது. (எசா.14:12-15) அவன் பூமியில் தள்ளப்பட்டான். மூன்றில் இரண்டு பங்கு தூதர்களும் அவனுடன் தள்ளப்பட்டார்கள். இவர்களால் தான் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமானது. இதனால் தேவனுடைய மறுசிருஷ்டிப்பு ஆதி.1:2-லிருந்து ஆரம்பமானது. லூசிபர் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்டான். (எசே.28:13) இங்கு அந்த காட்டு ஜீவன் மூலமாக ஏவாளை வஞ்சித்தான். பாவம், அதின் சம்பளமாகிய மரணம் உலகத்தில் பிரவேசித்தது. லூசிபர் மரணத்துக்கு அதிகாரியானான்.(எபி.2:14) ஆதலால் அவன் இந்த உலகத்தின் அதிபதியுமானான். அதோடு மட்டுமல்ல இப்பிரபஞ்சத்தின் தேவனுமானான். (யோ.16:11,14:30, லூக்.4:5,6)

56. இப்பொழுது இவன் எப்படி ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்படுகிறான்? இது அவனால் கூடாது. ஏனென்றால் அவனிடத்தில் வில்மாத்திரமே உண்டு. அம்பு இல்லை. ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டால் அவனிடம் வில்லோடு அம்பும் வேண்டுமே. அம்பு இவனிடத்தில் இல்லாததால் வில்லை மாத்திரம் கொண்டு ஜெயிக்கமுடியாது. ஆதலால் அவனது போராட்டம் தோல்வியையே தழுவும். சபைக்காலத்தின் முதலாம் சபை எபேசு. (வெளி.2:6) எபேசு என்றால் குறைப்படுதல் என்று பொருள். இச்சபையானது தொடக்கத்தில் பரிசுத்த ஆவியின் பரிபூரணத்தைப் பெற்று (வெளி.2:1-3) பின்பு சாத்தானின் ஆழத்தில் மூழ்கினது. (வெளி.2:4-6) எபேசு சபையில் அந்திக்கிறிஸ்து / சாத்தான் விதைத்த விதை சபைகாலங்களில் மரமாக வளர்ந்து, அசுத்தமும் அருவருப்புமான சகலவித பறவைகளின் கூடாயிற்று. (வெளி.18:2) பொதுவாக, ஏழு சபைக்காலங்கள், ஏழு முத்திரைகள், ஏழு இடிமுழக்கங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதாகவே காணப்படுகிறது. முதலாம் முத்திரை எபேசு சபை காலத்து நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளுக்கடுத்த சம்பவங்களைக் கொண்டதாகவே இருக்கிறது. கர்த்தர் வெறுக்கும் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியையும் காணப்பட்டது. (வெளி.2:6) அதாவது அந்தியோகியா பட்டணத்தில் (அப்.11:26) நிக்கொலாய் என்பவன் இருந்தான். இவன் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவினான். எருசலேமில் ஏழு மூப்பர்களில் ஒருவனானான். (அப்.6:5) இவனும் இவனை சார்ந்தவர்களும் பீலேயாமைப்போன்று அஞ்ஞான பண்டிகைகளைக் கொண்டாடினார்கள். மாம்ச இச்சைகளில் ஈடுபட்டனர், மக்களை தவறான பாதையில் வழிநடத்தினர். மக்களை தங்களுக்கு அடிமையாக்கி அவர்களை ஆட்கொண்டு, ஆளுகை செய்தனர். (வெளி.2:2,6) இன்றைய ஸ்தாபன சபைகள் இதைத்தான் செய்துகொண்டு வருகின்றது. ஆனால் உண்மையான சபையினால் இந்த பொல்லாதவர்களை சகிக்க முடியவில்லை. (வெளி.2:2,3) பாருங்கள் என்னாலும் கூட இதை சகிக்கமுடியவில்லை. அதாவது உலகத்தின் பாவங்கள் சபைக்குள் பிரவேசித்ததை சகிக்க முடியவில்லை. உண்மையான சபை இவர்களது கிரியைகளை வெறுத்தது. ஆனாலும் இவர்களது கிரியைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. இவ்வாறாக ஏழுசபையின் காலங்களில் பரிசுத்த ஆவியின் தன்மையும் அதேவேளையில் அந்திக்கிறிஸ்துவின் தன்மையும் தொடர்ந்து, அடுத்தடுத்து காணப்பட்டன. உண்மையான கிறிஸ்துவர்கள் ஆவிகளை பகுத்தறிகிறவர்களாக காணப்பட்டனர். (1யோ.4:1, மத்.24:23,28, 2பேது.2:1-2, 2தீமோ.4:3-4, 1தீமோ.4:1)

57. ஆக இந்த நிக்கொலாய் மதஸ்தினர் சபைமக்களை ஆட்கொண்டு ஆளுகை செய்ய ஆரம்பித்தனர். நிக்கொலாய் என்றாலே சபையின்மேல் அதிகாரம் செலுத்துதல் என்றே பொருள்படும். பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை / ஆளுகையை நிராகரித்தது. புனித மனிதன் என ஒருவனை அழைத்து அவனை சபையை வழிநடத்த ஏற்படுத்துவதாகும். ஆக சபையில் கோதுமையும், களையும் அடுத்தடுத்து வளர்ந்து வந்தது. உண்மையான கிறிஸ்துவர்கள் பரிசுத்த ஆவியினாலும் நிக்கொலாய் மதஸ்தினர் அந்திக்கிறிஸ்துவின் ஆவியினாலும் வழிநடத்தப்படலாயினர். முடிவில் நாளுக்குநாள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் சபையில் நிராகரிக்கப்பட்டது. சபையில் பழையபடி பரிசுத்த ஆசாரியத்துவம் உருவாகி ஆரோனின் முறைக்குத்திரும்பினர். இயேசு கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியம் நிராகரிக்கப்பட்டது. ஒருவன் சபையில் அங்கத்தினன் ஆகிவிட்டால், கிருபையினால் இரட்சிக்கப்பட்டவன் என்றனர். மரித்தபிறகு ஆத்துமாக்கள் தங்கும் ஸ்தலம் ஒன்று உண்டு எனவும். பிராத்தனையின் மூலம் இந்த ஆத்துமாக்களின் பாவம் நீங்கி அவர்களால் இரட்சிக்கப்படக்கூடும் என்றும், சபைக்கு காணிக்கை கொடுப்பதால் நரகத்தை தவிர்க்க முடியும் என்றும் கூறி மக்களை பலவகையில் பட்சிக்க ஆரம்பித்தனர். இவர்களைத்தான் பட்சிக்கிற ஓநாய்கள் என்று வேதம் கூறுகிறது. இவ்வாறாக நிக்கொலாய் மதஸ்தினர் சபையின்மீது ஜெயங்கொண்டனர். நிக்கொலாய் மதஸ்தினர் தாங்கள் விட்டுவந்த அஞ்ஞான மார்க்கத்தின்படியே கிறிஸ்தவ மார்க்கத்தை அமைத்தனர். (பிலி.3:2) ஆக அந்திக்கிறிஸ்து / நிக்கொலாய் மதஸ்தினர் சபையை ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டனர்.

58. இன்றைய ரோமன் கத்தோலிக்க திருச்சபை மற்றும் புராட்டஸ்டண்ட் சபைகள் அனைத்தும் நிக்கொலாய் மதஸ்தினரே. குருமார்கள், புனிதர்கள் / பரிசுத்தவான்கள் என்ற ஆசாரியத்துவம் இவர்களிடத்தில் காணப்படுகிறது. இவர்கள் தங்களை கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்று அழைத்துக்கொள்ளும் கள்ளகிறிஸ்துக்கள். சபை ஆரம்பத்தில் அந்திக்கிறிஸ்து / நிக்கொலாய் மதஸ்தரின் ஆவியை உடையதாக இருந்தபடியால் கிரீடம் இல்லை. ஆனால் 300 ஆண்டுகழித்து சிமிர்னா சபைகாலத்தில் ரோமாபுரியில் கிரீடம் கொடுக்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபை தன்னை ஆதி திருச்சபை, தாய் சபை என பெருமை பாராட்டிக்கொள்ளுகிறது. ஆனால் ஆதி திருச்சபை பிசாசுகளை துரத்தியது, பிணியாட்களை சொஸ்தமாக்கியது, மரித்தோரை உயிரோடெழுப்பியது, தரிசனங்களை கண்டது. ஆனால் இவைகளெல்லாம் இவர்களிடத்தில் எங்கே? தாங்கள்தான் உண்மையான திருச்சபை என அவர்கள் பொய்சொல்கிறார்கள் என்பதை கண்கள் உள்ளவர்கள் காணக்கடவர்கள். அம்பு இல்லாமல் வில்லை பிடித்திருக்கிறார்கள். அந்திக்கிறிஸ்துவின் ஆவியை எதிர்த்து சென்ற முதல் மிருகம் சிங்கம். யூதாக்கோத்திரத்து சிங்கமாகிய தேவனுடைய வார்த்தை.

59. இயேசு இவ்வுலகத்தில் இருந்தபோது யூதாஸ் அவரோடுகூட இருந்தான். ஆனால் இருவரும் வித்தியாசமான ஆவியை உடையவர்களாக இருந்தார்கள். மரணத்திற்கு பின் இருவரும் தங்களுக்குரிய ஸ்தலத்திற்கு சென்றனர். பின்பு திரும்பினர். அப்பொழுது கிறிஸ்துவின் ஆவி உண்மையான சபையை வழிநடத்தியது. யூதாஸின் ஆவி

கள்ளச்சபையை வழிநடத்தியது. கத்தோலிக்க திருச்சபை, புராட்டஸ்டண்ட் மற்றும் பெந்தெகொஸ்தே சபைகள் யாவும் அந்திக்கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் கள்ளச்சபைகளே. ஆனால் இருவரும் இயேசுவின் நாமத்தை சூடிக்கொண்டு அவரையே ஆராதிக்கிறவர்களாக கூறுகின்றனர். தேவன் இருவரோடும் இடைப்படுகிறார். பேசுகிறார். ஆனாலும் கள்ளச்சபையாகிய கத்தோலிக்க திருச்சபை மற்றும் அவளது குமாரத்திகளாகிய புராட்டஸ்டண்ட், பெந்தெகொஸ்தே சபைகள் அப்.2:38ல் உருவான கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை நிர்மூலமாக்க முயற்சிக்கும் ஆனால் முடியாது. அதேபோன்று அப்.2:38ல் உருவான சபையும் கள்ளச்சபையை இரட்சிப்புக்குள் கொண்டுவர முயற்சிக்கும், ஆனால் முடியாது. பரிசுத்த ஆவி கள்ளச்சபைமீது விழுந்து அற்புத அடையாளங்களைச் செய்யும். (மாற்.9:38, ரோ.19:29, மத்.5:45) இருசபையும் அடுத்தடுத்து வளர்ந்து முதிர்வடையும். ஆனால் சாத்தானின் தந்திரங்கள் நமக்கு தெரியாதா? நாம் எது உண்மையான சபை, எது கள்ளச்சபை என பகுத்தறிய முடியுமே? இது கிறிஸ்துவின் மணவாட்டியால் மாத்திரமே கூடும். எபேசு சபை முதல், லவோதிக்கேயா சபைக்காலம் வரை பரிசுத்த ஆவியின் தன்மையும், அந்தி கிறிஸ்து ஆவியின் தன்மையும் இருந்து வருகிறது.(1யோ.4:1) கடைசி காலத்திலும், அதாவது நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலத்திலும் அது அப்படியே இருக்கும். (மத்.24:23-26, 2பேது.2:1-2, 2தீமோ.4:3-4, 1தீமோ.4:1) கடைசி நாளில் கோதுமை (உண்மையான சபை) களஞ்சியத்தில் சேர்க்கப்படும். களை (கள்ளச்சபை) கட்டுக்கட்டாக கட்டப்பட்டு சுட்டெரிக்கப்படும்.

60. முடிவாக வெள்ளைக்குதிரையின்மேல் ஏறி இருந்தவன் அந்திக்கிறிஸ்து / சாத்தான். இவன் வெண்ணிற ஆடையில் வெள்ளைக்குதிரையில் வந்ததினால் மக்கள் இவன் ஒரு பரிசுத்தவானாக இருக்கக்கூடும், அப்படியானால் அது கிறிஸ்துவாகத்தான் இருக்கவேண்டும், அது சமாதான கர்த்தர் என நினைத்தார்கள். ஆனால் அது அப்படியல்ல. சபைக்காலத்தில் எவ்வாறு வெள்ளை வேஷ்டி, வெள்ளை குர்தா, வெள்ளை பேண்ட், சர்ட் அணிந்து மக்களை ஒருகூட்டம் கிறிஸ்துவின் பெயரில் வஞ்சிக்கிறதோ / ஏமாற்றுகிறதோ, ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய் கூட்டமாக அவர்கள் இருக்கிறார்களோ அதேபோன்று இங்கு அந்திக்கிறிஸ்து / சாத்தான் வெள்ளை ஆடையில் வெள்ளை குதிரையின்மேல் வந்து கிறிஸ்துவின் பேரில் மக்களை வஞ்சிக்கிறான் / ஏமாற்றுகிறான். ஆனால் அவர்களிடம் ஆதி சபையில் நடந்த அற்புத அடையாளங்கள் காணப்படவில்லை. தேவனுடைய வார்த்தை அவர்களிடம் கிடையாது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்கிறார்கள். அவன் வில்லை பிடித்திருந்தானேயன்றி அம்பு அவனிடம் இல்லை. கிரீடமும் அவனுக்கு பிற்பாடுதான் கொடுக்கப்பட்டது. அது எபேசு சபைகாலத்தில் அல்ல. மாறாக சிமிர்னா சபைகாலத்தில் கொடுக்கப்பட்டது. ஆனால் அவன் எபேசு சபைக்காலம் முதல் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளைக் கொண்டு ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டானேயன்றி அவனால் வெற்றியை தழுவமுடியவில்லை. கத்தோலிக்க, ஸ்தாபன சபைகள் யாவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக முடியாது. ஏனென்றால் அதனுடைய பிரஜைகள் இரட்சிக்கப்படவே இல்லை. ஆதலால் அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இல்லை. ஆதலால் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கடையவும் முடியாது. ஆனாலும் வெற்றி பெற்றவர்கள் போல் வெளிவேஷத்தில் மக்களுக்கு காணப்படுவார்கள். அவர்களை சார்ந்த அனைவரும் வஞ்சிக்கப்படுவார்கள்.

61. இந்நாட்களில் கர்த்தர் அவருடைய நாமத்திற்கென்று தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் மீட்கப்பட்ட சபையை வெளியே அழைத்து வருகிறார். ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். கர்த்தர் உலகத்திலிருந்தும், உலகத்திலுள்ள எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும், தமது மணவாட்டியை வெளியே அழைத்துக்கொண்டு வருகிறார். தெரிந்துக்கொள்ளப்பட்ட அந்த கடைசி ஆடு மந்தையில் வந்து சேரும் வரை அவர் பொறுமையாய் இருக்கவேண்டியதுள்ளது. அது எந்த நாளிலும் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நிறைவேறலாம். அந்த வேளையில் உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? இதுவரை இவைகளை என்னைக்கொண்டு, என் கரம்பிடித்து எழுத தூண்டியவர், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

மார்ச் **2017.**

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ. காலேப் யோசுவா**

**If Undelivered**
**Please Return to:**

**Caleb Joshua**
**11/2, Upstair, Opp.E.B.**
**Periyar Nagar, Senneerkuppam,**
**Poonamallee P.O.**
**Chennai – 600056**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
**Clause No. 128 P.O. GuideRules**
**GRNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006. Editor Caleb Joshua**